بسم اللہ الرحمن الرحیم    نحمدہ ونصلی علی رسولہ الکریم    وعلی عبدہ المسیح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly **BADAR** Qadian TAMIL

தொகுதி 4

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

இதழ் 22

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

24 ரமஜான் 1440 ஹிஜ்ரி கமரி 30 ஹிஜ்ரத் 1398 தப்லீக் ஹிஜ்ரி ஷம்ஸி
30 மே 2019


## அல்லாஹ்வின் கட்டளை

وَمَنْ يَّبْتَغِ غَيْرَ الْاِسْلَامِ دِيْنًا
فَلَنْ يُّقْبَلَ مِنْهُ ۚ
وَهُوَ فِي الْاٰخِرَةِ مِنَ الْخٰسِرِيْنَ۝

இஸ்லாம் அல்லாத வேறு (ஏதாவது) மார்க்கத்தை (மேற்கொள்ள) விரும்புபவனிடமிருந்து (அது) ஒருபோதும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது (என்பதற்காகவும்) அவன் மறுமையில் இழப்புக்குரியோனுமாவான் (என்பதையும் அவன் நினைவில் கொள்ளட்டும்). (3:86)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**ஒருமுறை எனது உள்ளத்தில் ஃபித்யா ஏன் நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்ற எண்ணம் வந்தது. அப்போது நல்வாய்ப்பு கிடைப்பதற்காக அதாவது நோன்பிற்கான நல்வாய்ப்பு அதன் மூலமாக கிடைக்க வேண்டும் என்பதற்காக அது வைக்கப்பட்டுள்ளது என்பது தெரிய வந்தது. இறைவனே நல்வாய்ப்பை வழங்கக்கூடியவனாக இருக்கின்றான்**

---

**வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

ஒருமுறை எனது உள்ளத்தில் ஃபித்யா ஏன் நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்ற எண்ணம் வந்தது. அப்போது நல்வாய்ப்புக் கிடைப்பதற்காக அதாவது நோன்பிற்கான நல்வாய்ப்பு அதன் மூலமாகக் கிடைக்க வேண்டும் என்பதற்காக அது வைக்கப்பட்டுள்ளது என்பது தெரிய வந்தது. இறைவனே நல்வாய்ப்பை வழங்கக்கூடியவனாக இருக்கின்றான். எல்லாவற்றையும் இறைவனிடமே கேட்க வேண்டும். இறைவன் எல்லாவற்றிற்கும் ஆற்றல் பெற்றவனாக இருக்கின்றான். அவன் விரும்பினால் எலும்புருக்கி நோயுள்ள ஒருவருக்குக் கூட நோன்பிற்கான ஆற்றலை வழங்க முடியும்.

எனவே, ஃபித்யாவின் மூலமாக அந்த ஆற்றல் கிடைத்து விட வேண்டும் என்பதே நோக்கமாகும். மேலும் அது இறைவனது அருளாலேயே ஏற்படுகின்றது. எனவே எனது பார்வையில் (மனிதன்) இவ்வாறு துஆ செய்வது சிறந்ததாகும். அதாவது இறைவா! இது உன்னுடைய ஓர் அருளுக்குரிய மாதமாகும். நான் இதிலிருந்து விலகியிருப்பவனாக உள்ளேன். நான் அடுத்த வருடம் உயிருடன் இருப்பேனா? அல்லது இருக்க மாட்டேனா? அல்லது இந்த விடுபட்ட நோன்புகளை நோற்க முடியுமா? முடியாதா? என்பதைப் பற்றி எனக்கென்ன தெரியும் என்று அவனிடம் இதற்கான நல்வாய்ப்பை வேண்டினால் அப்படிப்பட்ட உள்ளத்திற்கு இறைவன் ஆற்றலை வழங்கி விடுவான் என்ற உறுதி எனக்கு இருக்கின்றது.

இறைவன் விரும்பியிருந்தால் மற்ற சமுதாயங்கள் போன்று இந்த சமுதாயத்திற்கும் எந்தக் கட்டுப்பாட்டையும் வைத்திருக்க மாட்டான். ஆனால் அவன் இந்தக் கட்டுப்பாடுகளை நன்மைக்காகவே வைத்துள்ளான். எனது பார்வையில் இதன் உண்மை இதுவேயாகும். அதாவது மனிதன் உண்மையுடனும் முழுமையான கலப்பற்ற தூய உள்ளத்துடனும் இந்த மாதத்தில் என்னை விலக்கி வைத்து விடாதே என்று இறைவனிடம் கேட்கும் போது இறைவன் அவரை அதிலிருந்து விலக்கி வைக்க மாட்டான். அத்தகு நிலைமையில் மனிதன் ரமலான் மாதத்தில் நோயாளியாக ஆகிவிட்டாலும் அந்த நோய் அவனுக்கு அருளாக ஆகிவிடுகின்றது.

ஏனென்றால், ஒவ்வொரு செயலும் நல்லெண்ணத்தின் அடிப்படையிலேயே இருக்கின்றது. நம்பிக்கையாளர் தன் மூலமாக, தான் இறைவழியில் தைரியமிக்கவர் என்பதை நிரூபித்து விட வேண்டும். எந்த நபர் நோன்பிலிருந்தும் விலகியிருக்கின்றாரோ அவர் வேதனைமிக்க உள்ளத்துடன் அந்தோ! நான் உடல்நலத்துடன் இருந்திருந்தால் நோன்பு வைத்திருப்பேனே என்ற எண்ணம் அவரது உள்ளத்தில் இருந்தால், அவரது உள்ளம் இதற்காகக் கண்ணீர் வடிப்பதாக இருந்தால் மலக்குகள் அவருக்காக நோன்பு வைப்பர். அவர் சாக்குப்போக்குகளைத் தேடக்கூடாது என்பது நிபந்தனையாகும். அவ்வாறான நிலைமையில் இறைவன் அவரை ஒருபோதும் நற்கூலியிலிருந்து விலக்கி வைக்க மாட்டான்.

இது மிகவும் நுட்பமான விஷயமாகும். ஏதாவது ஒரு நபருக்கு (தனது நஃப்ஸின் சோம்பேறித்தனம் காரணமாக) நோன்பு சுமையாக இருக்கின்ற தென்றால், அவன் தனது எண்ணத்தில் நான் நோயாளியாக இருக்கின்றேன். எனது உடல்நலம் எப்படி இருக்கின்றதென்றால் நான் ஒருவேளை சாப்பிடாமல் இருந்தால் எனக்கு இந்த இந்த நோய்கள் ஏற்படும். இது ஏற்படும்; அது ஏற்பட்டு விடும் என்று கருதுவதாக இருந்தால் தன் மீது இருக்கின்ற இறைவனது அருளை தானே சுமையாகக் கருதுகின்ற அத்தகைய நபர் எப்போது இந்த நற்கூலிக்குத் தகுதி உடையவராக ஆக முடியும்?

ஆனால், எந்த நபரது உள்ளத்தில் ரமலான் வந்து விட்டது; அது வர வேண்டும் என்பதற்காகக் காத்திருந்ததோ, நோன்பு நோற்க வேண்டும் என்ற விஷயத்தில் மகிழ்ச்சி அடைந்ததோ, அவர் நோயின் காரணமாக நோன்பு வைக்க முடியவில்லை என்றால், அப்படிப்பட்டவர் வானத்தில் நோன்பிலிருந்தும் விலகியவராக இருக்க மாட்டார். இந்த உலகில் பல மக்களும் சாக்குப்போக்குகளைத் தேடுகின்றனர்.

நாம் எவ்வாறு உலகில் உள்ளவர்களை ஏமாற்றுகின்றோமோ அவ்வாறே இறைவனையும் ஏமாற்றுகின்றோம் என்று அவர்கள் நினைக்கின்றனர். சாக்குப்போக்குகளைத் தேடுகின்றவர்கள் தன் தரப்பிலிருந்தும் தானே காரணங்களை உருவாக்குகின்றனர். அதில் செயற்கையானவற்றைச் சேர்த்து அந்த காரணங்களைச் சரியானதாக ஆக்குகின்றனர்.

ஆனால், இறைவனது பார்வையில் அவை சரியானவை அல்ல. செயற்கையானவற்றின் கதவு மிகவும் விரிவானதாகும். மனிதன் விரும்பினால் இந்த (செயற்கைத் தன்மையின்) அடிப்படையில் முழு வாழ்நாளும் உட்கார்ந்தவாறு தொழுது கொண்டிருக்க முடியும். முற்றிலும் ரமலானின் நோன்புகளை நோற்காமல் இருக்க முடியும்.

ஆனால் இறைவன் அவனது எண்ணத்தையும் நாட்டத்தையும் அறிந்துள்ளான். எவர் உண்மையும் கலப்பற்ற மனத்தூய்மையும் கொண்டவராக இருக்கின்றாரோ அவரது உள்ளத்தில் வேதனை இருக்கின்றது என்பது இறைவனுக்கு தெரியும். இறைவன் அவருக்கு நற்கூலியை விட அதிகமாகவும் வழங்குகின்றான். ஏனென்றால், உள்ளத்திலுள்ள வேதனை மதிப்பளிப்பதற்குத் தகுந்த ஒன்றாகும்.

*(மல்ஃபூஸாத் தொகுதி 2, பக்கம் 563–564)*


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை விட இறைவனுக்கு அன்பிற்குரியவர் வேறு எவரும் கிடையாது. பெருமானார் (ஸல்) அவர்கள் இறைவனது விருப்பத்திற்குரியவராக இருந்தார்கள். ஆனால் அல்லாஹ்விடம் தன்னிறைவைப் பெற்றிருந்த போதிலும் அன்னாரிடம் அல்லாஹ்வின் மீதான அச்சத்தின் நிலை எந்த அளவுக்கு இருந்தது என்றால், தம்மைப் பற்றிக் குறிப்பிடும்போது, என்னுடன் எவ்வாறெல்லாம் நடந்து கொள்ளப்படும் என்பது எனக்குத் தெரியாது என்று கூறினார்கள். ஆக இது எத்தகைய அச்சத்திற்குரிய இடமாக இருக்கின்றது. மேலும் நல்ல அமல்களைச் செய்ய வேண்டும் என்றும், இறைவணக்கத்தின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும் என்றும் நாம் எந்த அளவுக்குக் கவலை கொள்ள வேண்டும்**

**ஹஸ்ரத் ஸைது (ரலி) அவர்கள் கூறினார்கள்: நான் உயிரோடு தப்பி வந்தாலும்; வரவில்லையென்றாலும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் உண்மையான ரஸூலும் நபியுமாவார்கள் என்பதே உண்மையாகும்**

**ஹஸ்ரத் உஸ்மான் பின் மழ்வூன் அவர்களின் மரணத்தின் காரணமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு மிகவும் துன்பம் ஏற்பட்டது. அன்னார் மரணித்த பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னாரது நெற்றியில் முத்தமிட்டார்கள். அப்போது பெருமானார் (ஸல்) அவர்களின் கண்கள் கண்ணீர் வடித்தன. அன்னார் நல்லடக்கம் செய்யப்பட்ட பிறகு அன்னாரின் கபரை அடையாளங்கண்டு கொள்ளும் விதத்தில் அங்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கல் ஒன்றைப் பதித்தார்கள். மேலும் பின்னர் அன்னார் சில முறை ஜன்னத்துல் பகீஹிற்கு சென்று அன்னாருக்காக துஆ செய்து வந்தார்கள். மதீனாவில் மரணித்த முதலாவது முஹாஜிர் ஹஸ்ரத் உஸ்மான் பின் மழ்வூன் அவர்கள் ஆவார்கள்**

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நாம் ஹஸ்ரத் உஸ்மான் பின் மழ்வூன் அவர்களிடம் நன்மையைத் தவிர வேறு எதனையும் காணவில்லை. நிச்சயமாக அவர் மிக நல்ல மனிதராக இருந்தார்**

**பத்ர் போரில் கலந்து கொண்ட பெருமானார் (ஸல்) அவர்களின் சஹாபாக்களான ஹஸ்ரத் உஸ்மான் பின் மழ்வூன் (ரலி), ஹஸ்ரத் வஹப் பின் சஅது பின் சராஹ் (ரலி) ஆகியோரைப் பற்றிய நற்குறிப்பு**

**இந்த ஆரம்பகால முஅல்லிமீன்கள் மிகப்பெரும் தியாங்களைச் செய்து அங்கு தமது வாழ்க்கையைக் கழித்துள்ளனர். தொலைதூரத்திலிருந்து தண்ணீர் எடுத்து வருவார்கள். மேலும் மண்ணை ஒன்றுசேர்த்து செங்களைத் தயார் செய்து தாம் வசிப்பதற்கான ஏற்பாட்டைச் செய்தார்கள். மேலும் ஜமாஅத்திடம் எந்த கோரிக்கையும் அவர்களை வைக்கவில்லை**

**ஹுஸூர் அவர்கள் குத்பாவிற்குப் பிறகு மதிப்பிற்குரிய முபல்லிக் மலிக் முஹம்மது அக்ரம் சாஹிப் அவர்களின் ஜனாஸா தொழுகையையும், மதிப்பிற்குரிய முபல்லிக் சவுத்ரி அப்துஷ் ஷக்கூர் சாஹிப், மதிப்பிற்குரிய முஅல்லிம் வக்ஃபே ஜதீது மலிக் சாலிஹ் முஹம்மது சாஹிப் மற்றும் தன்ஸானியாவைச் சேர்ந்த மதிப்பிற்குரிய மவேஷே சாஹிப் அவர்களின் ஜனாஸா காயிப் தொழுகையையும் தொழ வைத்தார்கள்**

செய்யிதுனா அமீருல் மு'ஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 26 ஏப்ரல் 2019** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1398 -ஆம் ஆண்டு **ஷஹாதத்** மாதம் **26 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ-الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ-إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ-صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

கடந்த குத்பாவில் நான் ஹஸ்ரத் உஸ்மான் பின் மழ்வூன் அவர்களைப் பற்றி எடுத்துரைத்தவாறு அன்னார் ஜன்னத்துல் பகீஹில் நல்லடக்கம் செய்யப்பட்ட நபர்களில் முதல் நபராக இருந்தார்கள் என்ற விஷயத்தில் கூற்றை நிறைவு செய்திருந்தேன்.

(அஸதுல் காபா தொகுதி **3** பக்கம் **591** உஸ்மான் பின் மழ்ஊன் – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஜன்னத்துல் பகீஹின் அடித்தளம் மற்றும் ஆரம்பம் தொடர்பாக நமக்கு கிடைக்கின்ற விளக்கம் இதுவாகும். அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவிற்கு வந்திறங்கிய பிறகு அங்கு ஏராளமான கபருஸ்தான்கள் இருந்தன. யூதர்களுக்கென்று தனி கபருஸ்தான் இருந்தது. அதே போன்று அரபிகளின் பல்வேறு கோத்திரத்தார்களுக்கென தனித்தனி கபருஸ்தான் இருந்தன. மதீனா தய்யிபா அக்காலத்தில் பல்வேறு பகுதிகளில் பரவி இருந்தது. எனவே ஒவ்வொரு கோத்திரமும் தத்தமது பகுதியில் திறந்த வெளியில் தங்களது மய்யத்துகளை அடக்கம் செய்து வந்தார்கள். கபா என்ற பிரபல்யமான தனி கபருஸ்தான் ஒன்று இருந்தது. அங்கு சிறிய சிறிய பல கபருஸ்தான்களும் இருந்தன. பனு ஸஃபர் கோத்திரத்திற்கென தனி கபருஸ்தான் இருந்தது. பனு சல்மாவிற்கென தனி கபருஸ்தான் இருந்தது. அதே போன்று ஏனைய பல கபருஸ்தான்களில் பனு சஅதாவிற்கென தனி கபருஸ்தான் இருந்தது.

அங்கும் கூட முதலில் பேரீச்சம் பழ மரங்களுக்குக்கீழ் சில இணை வைப்பவர்களின் கபர்கள் இருந்தன. இந்த எல்லா கபருஸ்தான்களிலும் بَقِيْعُ الْغَرْقَد மிகவுல் பழமையான மற்றும் பிரபல்யமான கபருஸ்தானாக இருந்தது. பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதனை முஸ்லிம்களுக்கான கபருஸ்தானாக தேர்ந்தெடுத்துக் கொண்டார்கள். அப்போதிருந்து இன்று வரை அது ஒரு தனித்தன்மை மற்றும் சிறப்பான அந்தஸ்தைப் பெற்று வருகின்றது. அந்த அந்தஸ்து எப்போதும் இருந்து வரும்.

ஹஸ்ரத் உபைதுல்லாஹ் பின் அபீ பின் ராஃபி அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முஸ்லிம்களுக்கென்று கபருஸ்தான் அமைப்பதற்காக இடத்தை தேடி வந்தார்கள். அந்த நோக்கத்திற்காக அன்னார் பல்வேறு இடங்களுக்குச் சென்று ஆய்வு செய்து பார்க்கவும் செய்தார்கள். இந்தப் பெருமை بَقِيْعُ الْغَرْقَد அந்த பகுதிக்கே எழுதப்பட்டிருந்தது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எனக்கு கட்டளையிட்டார்கள். நான் இந்த இடத்தை அதாவது بَقِيْعُ الْغَرْقَد தேர்வு செய்து விட வேண்டும். மேலும் அக்காலகட்டத்தில் அந்த இடத்தை بَقِيْعُ الْخَبْخَبَه என்றும் மக்கள் அழைத்து வந்தனர்.அங்கு எண்ணற்ற கர்கத் மரங்கள் இருந்து வந்தன. கொசுக்களும், எண்ணற்ற குப்பைகளும் நிறைந்திருந்தன. அந்த இடத்தில் எண்ணற்ற கொசுக்கள் மொய்த்துக் கொண்டிருக்கும்போது அந்த இடம் குப்பைகளின் காரணமாக அல்லது காடுகளின் காரணமாக புகை மண்டலம் படிந்திருப்பதைப் போன்று காட்சியளித்தது.

ஏற்கனவே கூறப்பட்டதைப் போன்று முதல் முதலில் ஹஸ்ரத் உஸ்மான் பின் மழ்வூன் அவர்கள் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னாரின் கபரின் தலைப்பகுதியில் அடையாளத்திற்காக கல் ஒன்றை வைத்தார்கள். மேலும் இவர் எங்களுக்கு முன்னால் சென்றவர் ஆவார் என்று கூறினார்கள்.

அதன் பிறகு வேறு எவரும் மரணித்தால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில், மரணித்தவரை எங்கு அடக்கம் செய்வது என்று மக்கள் கேட்பார்கள். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், முன்னவர் ஹஸ்ரத் உஸ்மான் பின் மழ்வூன் அவர்களுக்கு அருகில் அடக்கம் செய்யுங்கள் என்று கூறுவார்கள்.

எங்கு மரங்கள் அதிகமாக இருக்குமோ அதற்கு அந்த இடத்திற்கு அரபியில் பகீஹ் என்று கூறப்படும். இந்த இடம் மதீனாவில் பகீவுல் கர்கத் என்று அறியப்படத் தொடங்கியது. ஏனென்றால் அங்கு கர்கத் மரங்கள் அதிகமாக இருந்தன. அது மட்டுமல்லாமல் அங்கு ஏராளமான செடிகளும், கொடிகளும் இருந்தன. அந்த இடம் ஜன்னத்துல் பகீஹ் என்றும் அழைக்கப்படுகின்றது. ஜன்னத் என்ற சொல்லிற்கு அரபியில் தோட்டம் என்ற ஒரு பொருளும் உள்ளது. எனவே இந்த இடம் பெரும்பாலும் அரபி அல்லாத பார்வையாளர்களால் مَقَابِرُ الْبَقِيْع என்ற பெயரால் அறியப்பட்டது.

(அப்துல் ஹமீது காதிரி சாஹிப் அவர்கள் எழுதிய ஜுஸ்தஜூயே மதீனா என்ற நூலிலிருந்து பக்கம் 598 – 2007 ஆம் ஆண்டு பாகிஸ்தானிலுள்ள லாஹூரில் அச்சிடப்பட்டது)

அப்துல் ஹமீது காதிரி சாஹிப் அவர்கள் இதைப் பற்றிய விளக்கத்தை எழுதியுள்ளார்கள். மேலும் கூறுகின்றார்கள்: நாம் இந்த விஷயத்தை ஒருபோதும் மறந்து விடக்கூடாது. அதாவது பொதுவாக அரபிகள் தங்களது கபருஸ்தான்களை ஜன்னத் என்றே அழைத்து வந்தார்கள். அந்த இடத்திற்கு மகாபிருல் பகீஹ் என்றவொரு பெயரும் உள்ளது. அஃராபிகள் என்ற கிராமப்புறவாசிகளின் மத்தியில் அந்த பெயர் மிகவும் பிரபல்யமாக இருந்தது.

ஹஸ்ரத் சாலிம் பின் அப்தில்லாஹ் (ரலி) தனது தந்தையிடமிருந்து அறிவிக்கின்றார்கள். எங்களில் எவராவது ஒருவர் வஃபாத்தாகி விட்டால் இவரை முன்னவர்களிடத்தில் அனுப்பி வையுங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறுவார்கள். ஹஸ்ரத் உஸ்மான் பின் மழ்வூன் (ரலி) அவர்கள் எனது உள்ளத்தில் மிகச் சிறந்த முன்னவராக இருந்தார்கள் என்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறுவார்கள்.

(அல்மஜ்மவுல் கபீர் லித்திப்ரானி தொகுதி 12 பக்கம் 228 ஹதீஸ் எண் 13160 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் உஸ்மான் அவர்களின் மரணம் நிகழ்ந்த போது அன்னாரின் உடலுக்கு அருகில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வந்தார்கள். அன்னாருக்கு அருகில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூன்று முறை குனிந்தார்கள். பின்னர் தலையை உயர்த்தினார்கள். பிறகு உரத்த குரலில், அபூ சாயிபே! அல்லாஹ் உம்மை மன்னிப்பானாக. நீர் உலகின் மீது எந்த பற்றும் இல்லாத நிலையில் உலகை விட்டுச் சென்றீர் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உஸ்மான் பின் மழ்வூன் அவர்களின் இறந்த உடலின் மீது முத்தமிட்டார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அழுது கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும், அவர்களின் இரண்டு கண்களும் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தன.

ஹஸ்ரத் உஸ்மான் அவர்கள் மரணமடைந்த பிறகு அன்னாருக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முத்தமிட்டார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கண்ணீர் ஹஸ்ரத் உஸ்மான் அவர்களின் கன்னத்தில் பட்டு வழிந்தோடியதை நான் கண்டேன் என ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்.

அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கண்ணீர் எந்த அளவுக்கு அதிகமாக இருந்ததென்றால் அது ஹஸ்ரத் உஸ்மான் அவர்களின் கன்னங்களில் விழுந்து ஓடியது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகன் இப்ராஹீம் அவர்கள் மரணமடைந்போது اَلْحِقِيْ بِالسَّلَفِ الصَّالِحِ عُثْمَانَ ابْنِ مَظْعُوْن எனக் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அதாவது முந்தைய நல்லடியாரான உஸ்மான் பின் மழ்வூன் அவர்களைச் சென்று சந்தியுங்கள் என்று கூறினார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 5 பக்கம் 591 உஸ்மான் பின் மழ்ஊன் – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 303 உஸ்மான் பின் மழ்ஊன் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃப்வான் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் உஸ்மான் பின் மழ்வூன் அவர்களின் ஜனாஸா தொழுகையை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொழ வைத்தார்கள். மேலும் அதில் நான்கு தக்பீர்கள் கூறினார்கள்.

(சுனன் இப்னு மாஜா, கிதாபுல் ஜனாயிஸ் ஹதீஸ் எண் 1502)

சிலர் மூன்றை விட அதிகமாக தக்பீர் கூறக்கூடாது என்று கூறுகின்றனர். நான்கு தக்பீர்கள் கூறலாம் என்பது இதிலிருந்து தெரிய வருகின்றது.

முத்தலிப் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் உஸ்மான் அவர்கள் மரணமடைந்தபோது அன்னாரின் ஜனாஸா கொண்டு வரப்பட்டது. பின்னர் அது நல்லடக்கம் செய்யப்பட்ட பிறகு ஒரு கல் ஒன்றை கொண்டு வருமாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு நபருக்கு கட்டளையிட்டார்கள். கனமான அந்த கல்லை அந்த நபரால் சுமந்து வர முடியவில்லை. அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவருக்கு அருகில் சென்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தனது இரண்டு கரங்களால் துணியை எடுத்து வைத்தார்கள்.

முத்தலிப் அவர்கள் கூறினார்கள்: எவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து இந்த அறிவிப்பைச் செய்தாரோ அந்த நபர் கூறினார். ஒரு வகையில் இப்போதும் கூட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இரண்டு கரங்களின் வெண்மையையும் நான்

பார்க்கின்றேன். இப்போதும் கூட எனக்கு அந்தக் சம்பவம் நன்றாக நினைவில் உள்ளது. அன்னாரின் கரங்கள் மிக அழகாக இருந்தன. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வெண்மை எனக்குத் தென்பட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் துணியை அகற்றி அந்தக் கல்லைத் தாமே சுமந்தார்கள்.

பின்னர் அதனை ஹஸ்ரத் உஸ்மான் பின் மழ்வூன் அவர்களின் கபரின் தலைப் பகுதிக்கு அருகில் கொண்டு வந்து வைத்தார்கள். மேலும் இந்த அடையாளத்தின் மூலம் நான் எனது சகோதரரின் கபரை அடையாளங்கண்டு கொள்வேன். எனது குடும்பத்தில் எவர் மரணமடைந்தாலும் அவரை இவருக்கு அருகிலேயே நல்லடக்கம் செய்வேன் என ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். இது சுனன் அபீ தாவூதில் இடம் பெற்றுள்ள சம்பவமாகும்.

(சுனன் அபீ தாவூது, கிதாபுல் ஜனாயிஸ் ஹதீஸ் எண் 3206)

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உஸ்மான் பின் மழ்வூன் அவர்களின் மரணம் தொடர்பாக எடுத்துரைத்துள்ள விவரங்களில் ஒருசிலவற்றை நான் எடுத்துக் கூறுவேன்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் ஹிஜ்ரி 2–ஆம் ஆண்டின் சம்பவங்களை எடுத்துரைத்தவாறு கூறுகின்றார்கள்:

அதே வருடத்தின் இறுதியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தனது சஹாபாக்களுக்காக மதீனாவில் மக்பரா ஒன்றை தேர்வு செய்தார்கள். அதனை ஜன்னத்துல் பகீஹ் என்று கூறி வந்தனர். அதன் பிறகு பொதுவாக சஹாபாக்கள் அந்த மக்பாரவிலேயே நல்லடக்கம் செய்யப்பட்டார்கள். அந்த கபருஸ்தானில் முதல் முதலில் நல்லடக்கம் செய்யப்பட்ட நபர் ஹஸ்ரத் உஸ்மான் பின் மழ்வூன் அவர்கள் ஆவார்கள்.

ஹஸ்ரத் உஸ்மான் ஆரம்ப கால முஸ்லிம்களில் ஒருவராக இருந்தார்கள். நல்லவராகவும், இறைவணக்கம் செய்பவராகவும், சூஃபி தன்மை கொண்டவராகவும், முஸ்லிமான பிறகு ஒருமுறை அன்னார் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் வருகை தந்து நான் உலகத்தை முற்றிலும் துறந்து விட்டு, மனைவி மக்களை விட்டுப் பிரிந்து சென்று எனது வாழ்க்கையை முற்றிலும் இறைவணக்கத்திற்காக அர்ப்பணித்துக் கொள்ள விரும்புகின்றேன். எனவே எனக்கு அதற்கான அனுமதி தாருங்கள் என்று கேட்டார்கள். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதற்கு அனுமதி தர மறுத்து விட்டார்கள்.

இதைப் பற்றிய விளக்கத்தை நான் கடந்த குத்பாவில் கூறியுள்ளேன். எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் உஸ்மான் பின் மழ்வூன் அவர்களின் மரணத்தின் காரணமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு மிகவும் துன்பம் ஏற்பட்டது. மேலும் அறிவிப்பில் வருகின்றது. அன்னார் மரணித்த பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னாரது நெற்றியில் முத்தமிட்டார்கள். அப்போது அன்னாரின் கண்கள் கண்ணீர் வடித்தன. அன்னார் நல்லடக்கம் செய்யப்பட்ட பிறகு அன்னாரின் கபரை அடையாளங்கண்டு கொள்ளும் விதத்தில் அங்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கல் ஒன்றை பதித்தார்கள். மேலும் பின்னர் அன்னார் சில முறை ஜன்னத்துல் பகீஹிற்கு சென்று அன்னாருக்காக துஆ செய்து வந்தார்கள். மதீனாவில் மரணித்த முதலாவது முஹாஜிர் ஹஸ்ரத் உஸ்மான் பின் மழ்வூன் அவர்கள் ஆவார்கள்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 462,463)

ஹஸ்ரத் உஸ்மான் பின் மழ்வூன் அவர்களின் மரணத்தின்போது அன்னாரின் துணைவியார் மர்ஸிய்யா அவர்கள் எழுதிய அரபிக் கவிதைகள் இவ்வாறாகும்.

يَا عَيْنُ جُوْدِيْ بِدَمْعٍ غَيْرِ مَمْنُوْنِ عَلٰى رَزِيَّةِ عُثْمَانَ بْنِ مَظْعُوْنِ

عَلٰى امْرِيءٍ بَاتَ فِيْ رِضْوَانِ خَالِقِهٖ طُوْبٰى لَهٗ مِنْ فَقِيْدِ الشَّخْصِ مَدْفُوْنِ

طَابَ الْبَقِيْعُ لَهٗ سُكْنٰى وَ غَرْقَدُهٗ وَأَشْرَقَتْ اَرْضُهٗ مِنْ بَعْدِ نَعْيَيْنِ

وَأَوْرَثَ الْقَلْبَ حُزْنًا لَا انْقِطَاعَ لَهٗ حَتَّى الْمَمَاتِ فَمَا تَرْقٰى لَهٗ شُوْنِيْ

(அஸதுல் காபா தொகுதி 3 பக்கம் 591 உஸ்மான் பின் மழ்ஊன் – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அதன் பொருள்: கண்ணே! உஸ்மானின் மரணத்தின்போது நின்று விடாத கண்ணீரை நீ வடிப்பாயாக. தன்னைப் படைத்த இறைவனின் திருப்திக்காக இரவையும் பகலையும் கழித்து வந்த அந்த நபரின் மரணத்திற்காக நீ கண்ணீர் வடிப்பாயாக. இந்த மண்ணில் ஒரு முன்னுதாரனமான மனிதர் அடக்கம் செய்யப்பட்டிருக்கின்றார். இந்த இடம் அன்னார் அடக்கம் செய்யப்பட்ட பிறகு ஒளிமயமாகி விட்டது. அன்னாரின் மரணத்தால் நான் மரணிக்கும் வரை முடிவடையாத துன்பம் எனக்கு வந்தடைந்துள்ளது. எனது இந்த நிலை மாற்றம் அடையாது.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 495 உஸ்மான் பின் மழ்ஊன் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இது அன்னாரின் மனைவி தனது உணர்வுகளை வெளிப்படுத்திய கவிதை வரிகளாகும்.

ஹஸ்ரத் உம்மே ஆலா அன்ஸாரி என்ற பெண்மணி இருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் பைஅத் செய்திருந்தார்கள். அன்னார் கூறினார்கள்: முஹாஜிரீன்கள் தங்குவதற்கான இடத்தை தேர்வு செய்வதற்காக சீட்டு குலுக்கிப் போடப்பட்ட போது ஹஸ்ரத் உஸ்மான் பின் மழ்வூன் அவர்கள் தங்குவதற்கான இடத்தின் பெயர் எனது வீட்டின் பெயரில் வந்தது. நாங்கள் அவரை எமது வீட்டில் தங்க வைத்தோம்.

ஹஸ்ரத் உம்மே ஆலா கூறினார்கள்: ஹஸ்ரத் உஸ்மான் பின் மழ்வூன் எங்களுடன் தங்கினார்கள். அன்னார் நோயுற்றபோது நாங்கள் அன்னாருக்குத் தொண்டாற்றினோம். அன்னார் மரணித்தபோது நாங்கள் அவரை அவரது உடைகளிலிலேயே கஃபன் செய்தோம். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எங்களிடத்தில் வந்தார்கள்.

ஹஸ்ரத் உம்மே ஆலா கூறுகின்றார்கள்: அபூ சாயிபே! உம்மீது அல்லாஹ்வின் கருணை உண்டாவதாக என்று நான் கூறினேன்.

அபூ சாயிப் என்பது ஹஸ்ரத் உஸ்மான் பின் மழ்வூன் அவர்களின் சுட்டுப் பெயராகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னிலையில் மீண்டும் மீண்டும் இந்த சொற்களை நான் கூறினேன்.

ஹஸ்ரத் உம்மே ஆலா அவர்கள் கூறுகின்றார்கள்: அபூ சாயிபே! உம்மீது அல்லாஹ்வின் கருணை உண்டாவதாக. அல்லாஹ் உங்களுக்கு நிச்சயமாக கண்ணியம் வழங்கி விட்டான் என்று நான் சாட்சி கூறுகின்றேன் என்றும் அன்னார் கூறினார்கள். அல்லாஹ் உங்களுக்கு நிச்சயமாக கண்ணியம் வழங்கினான். அதற்கு நான் சாட்சியாவேன் என்ற இந்த சொற்களை அன்னார் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முன்னிலையில் மீண்டும் மீண்டும் கூறினார்கள்.

இந்த விஷயத்தை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் செவியுற்ற போது அன்னாரிடம் அல்லாஹ் அவருக்கு நிச்சயமாக கண்ணியம் வழங்கினான் என்று உமக்கு எப்படி தெரிய வந்தது? என்று கேட்டார்கள். அதற்கு நான், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! எனது தாயும் தந்தையும் உங்கள் மீது அர்ப்பணமாகட்டுமாக. எனக்கு அது தெரியாது. எனினும் அது எனது உணர்வாக இருந்தது. அதை நான் வெளிப்படுத்தினேன் என்று அன்னார் கூறினார்கள்.

அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உஸ்மான் அவர்களைப் பொறுத்தவரை அவர் இப்போது மரணமடைந்து விட்டார். நான் அவருக்கு நன்மையே ஏற்படும் என்று நம்புகின்றேன். அல்லாஹ் அவருக்கு நிச்சயமாக அவருக்கு கண்ணியம் வழங்குவான் என்றே நான் நம்புகின்றேன். ஆனால் அல்லாஹ்வின் மீது ஆணையாக! அன்னார் இவ்வாறும் கூறினார்கள்: அதாவது அல்லாஹ்வின் மீது ஆணையாக! உஸ்மானுடன் என்ன நடக்கும்? என்று எனக்கு ஒருபோதும் தெரியாது. துஆ நிச்சயமாக உள்ளது. ஆயினும் நான் அல்லாஹ்வின் தூதராக இருந்தும் கூட நிச்சயமாக அவருக்கும் கண்ணியம் அளிக்கப்பட்டதா? என்று என்னால் கூற முடியாது.

இதைக் கேட்ட உம்மே ஆலா அவர்கள் கூறினார்கள்: இறைவன் மீது ஆணையாக! இந்த சம்பவத்திற்குப் பிறகு நான் யாரையும் மேலோட்டமாகத் தூயவர் என பட்டம் வழங்கியதில்லை. அவர் நிச்சயமாக கண்ணியம் வழங்கப்பட்டார் என்ற சொல்லை அதன் பிறகு வேறு எவருக்காகவும் பயன்படுத்தவில்லை. எனக்கு இந்த விஷயத்தின் காரணமாக மிகவும் வேதனை ஏற்பட்டிருந்தது.

அன்னார் கூறுகின்றார்கள்: நான் அந்த துக்கத்திலேயே தூங்கி விட்டேன். எனக்கு அன்னாருடன் ஒரு சிறப்பான தொடர்பு இருந்தது. நல்லுணர்வுகளும் இருந்தன.

தொடர்ந்து அன்னார் கூறுகின்றார்கள்: நான் இரவு தூங்கிய போது கனவில் ஹஸ்ரத் உஸ்மான் அவர்களின் நீரூற்று ஒன்று எனக்குக் காட்டப்பட்டது. அதாவது நீரூற்று ஒன்று ஒடிக் கொண்டிருந்தது. அது ஹஸ்ரத் உஸ்மான் அவர்களின் நீரூற்று என்று காட்டப்பட்டது.

இந்தக் கனவைக் கண்ட பிறகு நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் சென்றேன். அன்னார் கூறினார்கள்: நான் இவ்வாறு கனவு ஒன்றை கண்டேன் என்று கூறியபோது இது அன்னாரின் அமல் ஆகும் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்னிடத்தில் கூறினார்கள்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுஷ் ஷஹாதத், பாப் குர்ஆ ஃபீ முஷ்கிலாத் ஹதீஸ் எண் 2687)

அதாவது ஓடிக் கொண்டிருக்கும் இந்த நீரூற்று என்பது அன்னாரின் செயலாக இருந்தன. அவர் சுவர்க்கத்தில் இருப்பதை அல்லாஹ் உங்களுக்குக் காட்டித் தந்துள்ளான். அந்த நீரூற்று தான் இப்போது ஓடிக் கொண்டிருக்கிறது.

ஆக, இதுவும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தர்பிய்யத் வழங்கும் ஒரு வழிமுறையாக இருந்தது. வெறும் பேச்சு வழக்கில் அல்லாஹ்வின் பாவமன்னிப்பு பற்றி சாட்சியம் வழங்காதீர்கள் என்பது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தர்பிய்யத் வழிமுறையாக இருந்தது. ஆயினும் கனவில் ஹஸ்ரத் உஸ்மான் பின் மழ்வூன் அவர்களின் உயர்தரமான செயல்கள் ஒரு நீரூற்றின் வடிவில் ஹஸ்ரத் உம்மே ஆலா அவர்களுக்குக் காட்டப்பட்டபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த கனவை உண்மைப்படுத்தினார்கள். ஏனென்றால் அந்த பத்ர் போர் சஹாபாக்களிடத்தில் இறைவன் திருப்திபடைந்திருந்தான் என்பதை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நன்கு அறிந்திருந்தார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர்களுக்காகச் செய்த துஆக்களும் அன்னார் தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வெளிப்படுத்திய உணர்வுகளின் வெளிப்பாடும் நமக்கு இதனை மிகவும் தெளிவுபடுத்துகின்றது.

அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அன்னார் தொடர்பாக நம்பிக்கை இருந்தது. அல்லாஹ் அவர்களின் துஆக்களை ஏற்றுக் கொள்வான் என்றும் நம்பி வந்தார்கள். அன்னார் இறை நெருக்கத்தைப் பெறக்கூடியவராக இருந்தார்கள். ஆயினும் நீங்கள் எவரைப் பற்றியும் சாட்சியம் வழங்க முடியாது என்று கூறினார்கள்.

முஸ்னத் அஹ்மது பின் ஹம்பல் என்ற நூலில் இந்த கட்டுரை இவ்வாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அதாவது ஹார்ஜா பின் ஸைது தமது தாயாரிடமிருந்து அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் உஸ்மான் பின் மழ்வூன் அவர்கள் மரணமடைந்தபோது ஹார்ஜா பின் ஸைது அவர்களின் தாயார் கூறினார்கள்: அபூ சாயிபே! நீர் தூய்மையான மனிதர் ஆவீர். உமது நல்ல நாட்கள் மிக நன்மையாகவே அமைந்தன.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதனை செவியுள்ளார்கள். இவ்வாறு கூறியவர் யார்? எனக் கேட்டார்கள். அதற்கு அன்னார், நான்தான் என்று கூறினார்கள். இவ்வாறு உமக்கு எவ்வாறு தெரிந்தது? என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். அதற்கு நான், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! ஹஸ்ரத் உஸ்மான் பின் மழ்வூன் அவர்களின் அமல் மற்றும் அவர்களின் இறைவணக்கங்கள் அவ்வாறு இருந்தன என்று கூறினேன். இந்த விஷயங்களின் காரணமாக நிச்சயமாக அல்லாஹ் அவருடன் பாவமன்னிப்பு நடைமுறையை மேற்கொண்டு விட்டான். மேலும் மன்னித்து விட்டான் என்பதை எனக்கு வெளிப்படுத்தின என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நாம் ஹஸ்ரத் உஸ்மான் பின் மழ்வூன் அவர்களிடம் நன்மையைத் தவிர வேறு எதனையும் காணவில்லை. நிச்சயமாக அவர் மிக நல்ல மனிதராக இருந்தார் என்றும் ஆனால் அத்துடன் அன்னார் இவ்வாறும் கூறினார்கள்: நான் அல்லாஹ்வின் தூதராக இருக்கின்றேன். ஆனால் இறைவன் மீது ஆணையாக! என்னுடன் எவ்வாறு நடந்து கொள்ளப்படும் என்பதை நான் அறியேன் என்பதையும் நீங்கள் நினைவில் கொள்ளுங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(முஸ்னது அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 8 பக்கம் 872 ஹதீஸ் எண் 28006 – 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள ஆலிமுல் குதுபில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை விட இறைவனுக்கு நேசமானவர் வேறு எவரும் கிடையாது. அன்னார் இறைவனை மிகவும் நேசித்தார்கள். இறைவனின் நண்பனாக இருந்தார்கள். ஆனால் இறைவனுடைய தேவையற்றவன் என்ற உணர்வும், இறையச்சமும் எப்படி இருந்ததென்றால் அன்னார் அதன் காரணமாகவே என்னுடன் எவ்வாறு நடந்து கொள்ளப்படும் என்பதை நான் அறியேன் என்று கூறினார்கள்.

எனவே நமக்கு எந்த அளவுக்கு அச்சத்திற்குரிய இடமாக இது இருக்கிறது? நாம் எந்த அளவுக்குக் கவலைப்பட வேண்டியதிருக்கிறது? நாம் நல்ல அமல்களைச் செய்ய வேண்டும். இறைவனை வணங்குவதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். அவ்வாறு செய்த பின்னரும் அதன் மீது எந்த பெருமையையும்

கொள்ளக் கூடாது. மாறாக, நாம் பணிவில் முன்னேறிக் கொண்டே செல்ல வேண்டும். மேலும் எப்போதும் அல்லாஹ்வுடைய கருணை மற்றும் அருளை யாசித்துக் கொண்டிருக்க வேண்டும். அவன் தனது அருளால், தனது கருணையினால் நம்மை மன்னிக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டிருக்க வேண்டும்.

முஸ்னது அஹ்மது பின் ஹம்பல் என்ற ஹதீஸ் புத்தகத்தில் இன்னொரு அறிவிப்பு இடம் பெற்றுள்ளது. அதில் ஹஸ்ரத் உம்மே ஆலா அவர்கள் கூறுகின்றார்கள்: எங்கள் வீட்டில் ஹஸ்ரத் உஸ்மான் பின் மழ்வூன் அவர்கள் நோயுற்றார்கள். நாங்கள் அவர்களுக்குக் தொண்டாற்றினோம். அன்னார் மரணமடைந்து விட்டார்கள். நாங்கள் அவர்களது உடையிலேயே அவருக்கு கஃபன் அணிவித்தோம். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எங்களிடத்தில் வந்தார்கள்.

அப்போது நான், அபூ சாயிபே! அல்லாஹ்வின் கருணை உம்மீது உண்டாகட்டுமாக. அல்லாஹ் உங்களுக்குக் கண்ணிம் அளித்து விட்டான். இது உங்களைப் பற்றிய எனது சாட்சியமாகும் என்று நான் கூறினேன். அல்லாஹ் மிக அதிகமாக கண்ணிமும், மரியாதையும் வழங்கினான் என்று நான் கூறினேன்.

அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அல்லாஹ் அன்னாருக்குக் கண்ணியம் வழங்கி விட்டான் என்று உங்களுக்கு எவ்வாறு தெரியும் என்று கேட்டார்கள். அதற்கு நான், எனது தாய் தந்தை உங்கள் மீது அர்ப்பணமாகட்டுமாக. எனக்குத் தெரியாது என்று நான் கூறினேன். நிச்சயமாக அவருக்கு அவரது இறைவன் புறமிருந்து மரணம் வந்து விட்டது. நான் அவர் தொடர்பாக நன்மை நடக்கும் என்றே நம்புகின்றேன். அல்லாஹ் அவருடன் நல்ல முறையில் நடந்து கொள்வான் என்று நான் நம்புகின்றேன்.

ஆனால் அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் அல்லாஹ்வின் தூதராக இருக்கின்றேன். எனினும் என்னுடன் எவ்வாறு நடந்து கொள்ளப்படும் என்பதைப் பற்றி நான் அறியேன் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

இந்த சம்பவத்திற்குப் பிறகு நான் எவரையும் பரிசுத்தமானவர் என்று கூறியதில்லை என்று அன்னார் கூறி வந்தார்கள். ஆயினும், இந்தச் சம்பவம் எனக்கு மிகவும் வேதனை அளித்தது. பின்னர் தாம் கண்ட கனவைக் குறிப்பிடுகின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்திலும் அந்தக் கனவை கூறினார்கள்.

(முஸ்னது அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 8 பக்கம் 871,872 ஹதீஸ் எண் 28004 – 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள ஆலிமுல் குதுபில் அச்சிடப்பட்டது)

முந்தைய இரண்டு ஹதீஸ் புத்தங்களில் இந்த சம்பவம் எழுதப்பட்டுள்ளது. அல்லாஹ் அன்னார் அந்தஸ்தை உயர்த்தியே இருக்கின்றான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் துஆக்களும் இருக்கின்றன. எப்போதும் அந்தஸ்தை உயர்த்திக் கொண்டே செல்வானாக. நல்ல முன்மாதிரிகளை நாமும் நம்மிடத்தில் நிலைநாட்டக் கூடியவர்களாக திகழ்வோமாக.

அடுத்து நான் கூறப்போகின்ற சஹாபியின் பெயர் ஹஸ்ரத் வஹப் பின் சஅது பின் அபீ சராஹ் (ரலி) ஆவார்கள். ஹஸ்ரத் வஹப் (ரலி) அவர்களின் தந்தை பெயர் சஅது ஆகும். அவரின் தொடர்பு பனு ஆமிர் பின் லூயி கோத்திரத்தைச் சார்ந்ததாக இருந்தது. அன்னார் அப்துல்லாஹ் பின் சஅது பின் அபீ சராஹின் கோத்திரத்தைச் சார்ந்தவராக இருந்தார். அன்னாரின் தாயார் மஹானா பின்த் ஜவாஷரி ஆகும்.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 217 வஹப் பின் சஅது – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் வஹப் அவர்களின் சகோதரர் அப்துல்லாஹ் பின் சஅது பின் அபீ சராஹ் என்பவர் வஹீயை எழுதக் கூடியவராக இருந்தார். பின்னர் அவர் முர்ததாகி விட்டார்.

இது தொடர்பாக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தமது ஒரு புத்தகத்தில் குறிப்பிடுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வஹியை எழுதக்கூடிய ஒரு நபர் இருந்தார். அவரது அப்துல்லாஹ் பின் அபீ சராஹ் ஆகும்.

சீரத்துல் ஹல்பியாவில் எழுதப்பட்டுள்ளது: ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃப்பான் பற்றி அதில் கூறப்பட்டுள்ளது. அன்னார் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஒரு புதிய வஹி இறங்கினால் அவரை அழைத்து உடனே அதை எழுத வைப்பார்கள். ஒரு நாள் அன்னாருக்கு சூரா முஃமினுனின் 14,15 ஆகிய வசனங்களை எழுதிக் கொண்டிருந்தார். அப்போது ثُمَّ أَنْشَأْنَاهُ خَلْقًا آخَرَ என்ற வசனத்தை அடைந்தபோது எழுதியவர் நாவிலிருந்து அவரையும் அறியாமல் சில வார்த்தைகள் வெளிவந்தன. فَتَبَارَكَ اللَّهُ أَحْسَنُ الْخَالِقِينَ என்று அவர் கூறினார்.

அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், இதுவே வஹீயாகும். இதனை எழுதிக் கொள்ளுங்கள் என்று கூறினார்கள். துர்பாக்கியசாலியான அவர், முந்தைய வசனங்களின் விளைவாக இந்த வசனமே இங்கு இடம்பெற வேண்டும் என்ற கருத்தினை அவர் புரிந்து கொள்ளவில்லை. தமது வாயிலிருந்து வெளிவந்த சொற்கள் ஆயத்தாக ஆகிவிட்டனவா என்று அவர் புரிந்து கொண்டார். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதனை வஹீயாக ஆக்கி விட்டார்களே என்றும் அவர் கருதினார்.

இவ்வாறு முழுக் குர்ஆனும் நவூதுபில்லாஹ் சொந்தமாக உருவாக்கிக் கொள்ளப்பட்டது என்று கருதினார். இதனால் அவர் முர்ததும் ஆகி விட்டார். மக்காவிற்கு சென்று விட்டார். மக்கா வெற்றி கொள்ளப்பட்ட போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கொலை செய்யப்பட வேண்டுமென்று கட்டளையிட்ட நபர்களில் அப்துல்லாஹ் பின் அபீ பின் சராஹும் ஒருவர் ஆவார். ஆனால் ஹஸ்ரம் உஸ்மான் (ரலி) அவர்கள் அவருக்கு அடைக்கலம் வழங்கினார்கள்.

அவரது அடைக்கலத்தின் விளக்கம் இதுவாகும். மக்கா வெற்றி கொள்ளப்பட்டபோது அப்துல்லாஹ் பின் அபீ பின் சராஹ் அவர்களுக்கு, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தன்னைக் கொலை செய்ய கட்டளையிட்டுள்ளார்கள் என்பது தெரிந்தது. எனவே ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃப்பான் அவர்களிடத்தில் அடைக்கலம் வேண்டி சென்றார்கள். மேலும் அவர்களிடத்தில், சகோதரனே! எனது கழுத்தை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் துண்டிப்பதற்கு முன்பாக அவர்களிடத்தில் அடைக்கலத்தைப் பெற்றுத் தருவீராக என்று கூறினார்கள். சீரத்துல் ஹல்பியாவில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது.

எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் எழுதுகின்றார்கள்: அவர் அன்னாரின் வீட்டில் மூன்று, நான்கு நாட்கள் ஒளிந்திருந்தார். ஒரு நாள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவில் மக்களிடமிருந்து பைஅத் வாங்கிக் கொண்டிருந்தபோது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் அப்துல்லாஹ் பின் அபீ சராஹ் அவர்களையும் அழைத்துச் சென்றார்கள்.

மேலும் அவரது பைஅத்தை ஒப்புக் கொள்ளும்படி கேட்டுக் கொண்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முதலில் சற்று தாமதம் செய்தார்கள். ஆனால் பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவரிடத்தில் பைஅத் வாங்கினார்கள்.

மேலும் இதேபோன்று மீண்டும் ஒரு முறை இஸ்லாத்தை ஒப்புக் கொண்டார்கள்.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 6 பக்கம் 139 & அஸீரத்துல் ஹல்பியா தொகுதி 3 பக்கம் 130 பாப் ஸிக்ர் முஆஸிய்யா/ஃபதஹ் மக்கா – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இன்னும் ஏராளமான விஷயங்கள் இருக்கின்றன. குழப்பங்கள் செய்து வந்ததன் காரணமாகவும், ஆவேசமடைந்து வந்ததன் காரணமாகவும் அவர் கொலை செய்யப்பட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டிருந்தார். இவர் முர்தத் ஆகி விட்டதன் காரணமாக மட்டுமே அவர் கொலை செய்யப்பட வேண்டும் என்று கட்டளையிடப்படவில்லை.

ஆஸிம் பின் உமர் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் வஹப் அவர்கள் மக்காவிலிருந்து மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்தபோது அன்னார் ஹஸ்ரத் குல்ஸூம் பின் ஹதம் அவர்களின் வீட்டில் தங்கினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் வஹப் மற்றும் ஹஸ்ரத் சவீது பின் அம்ர் ஆகியோருக்கிடையில் சகோதரத்துவ பந்தத்தை ஏற்படுத்தினார்கள். அவர்கள் இருவரும் சகோதரர்களாக ஆனார்கள். மூத்தா போர் நாளன்று அன்னார் ஷஹீதானார்கள்.

ஹஸ்ரத் வஹப் பத்ர், உஹது, அகழ் போர் உட்பட அனைத்துப் போர்களிலும், ஹுதைபிய்யா சந்தர்ப்பத்தின் போதும், கைபர் சந்தர்ப்பத்தின் போதும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இருந்தார்கள். மேலும் அன்னார் ஜமாஅதிவுல் ஊலா ஹிஜ்ரி 8 ஆம் ஆண்டு மூத்தா போரில் ஷஹீதானார்கள். ஷஹீதான நாளன்று அன்னாரது வயது 40 ஆக இருந்தது.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 217 வஹப் பின் சஅது – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸில் அச்சிடப்பட்டது)

மூத்தா போர் என்பது என்ன? அல்லது அதற்கான காரணங்கள் என்ன? என்பதைப் பற்றி தப்காத்துல் குப்ரா என்ற புத்தகத்தில் குறிப்பு கிடைக்கிறது.

இந்தப் போர் ஜமாதிவுல் ஊலா மாதத்தில் ஹிஜ்ரி 8 ஆம் ஆண்டு நடைபெற்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஹாரிஸ் பின் உமைர் அவர்களைத் தனது தூதராக நியமனம் செய்து பஸரா அரசரை நோக்கி ஒரு கடிதம் ஒன்றை எழுதிக் கொடுத்து அவரை அனுப்பி வைத்தார்கள். அவர் மூத்தா என்ற இடத்தை அடைந்தபோது அன்னார் சவாரியிலிருந்து கீழே இறங்கினார்கள். அப்போது ஷர்ஜபீல் பின் அம்ர் கஸ்ஸானி என்பவர் சிரியா நாட்டில் கவர்னராக நியமிக்கப்பட்டவர்களில் ஒருவராக இருந்தார்கள்.

சீரத்துல் ஹல்பியாவில் இது தொடர்பாக வருகின்றது. அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூதரை தடுத்து நிறுத்தி அவரை அங்கேயே ஷஹீதாக்கி விட்டார். ஹஸ்ரத் ஹாரிஸ் பின் உமைர் அவர்களைத் தவிர்த்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் எந்தவொரு தூதரும் ஷஹீதாக்கப்படவில்லை.

இந்த வேதனைமிகு செய்திக்கான தகவல் அன்னாருக்கு கிடைத்தது. அப்போது அந்த நேரம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு மிக கடினமாக கழிந்தது. மிகவும் அதனால் அன்னாருக்கு மிகுந்த வேதனையும் ஏற்பட்டது. அன்னார் மக்களை போர் புரிவதற்காக ஒன்று கூட்டினார்கள். அவர்களின் எண்ணிக்கை 3000 ஆக இருந்தது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இவர்கள் அனைவரின் அமீர் ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸ் ஆவார்கள். மேலும் அவர்களிடத்தில் ஒரு வெள்ளைக் கொடியை கொடுத்து அவருடன் ஸைது அவர்களுக்கும் அந்த கொடியை கொடுத்து இவ்வாறு அறிவுரை செய்தார்கள். அதாவது ஹஸ்ரத் ஹாரிஸ் பின் உமைரா ஷஹீதாகி விட்டால் அவர்களது இடத்தில் அவர்கள் அனைவருக்கும் அமீராக ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா இருப்பார்கள்.

இன்னொரு வெள்ளைக் கொடி ஒன்றை ஆயத்தம் செய்து ஹஸ்ரத் ஸைது அவர்களுக்கு கொடுத்தவாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அறிவுரை செய்தார்கள். ஹஸ்ரத் ஹாரிஸ் பின் உமைர் எங்கு ஷஹீதாக்கப்பட்டாரோ அங்கு சென்று அங்குள்ள மக்களை இஸ்லாத்தின் பக்கம் அழையுங்கள். அவர்கள் அதனை ஒப்புக் கொண்டு விட்டால் நல்லது. இல்லையென்றால் அவர்களுக்கெதிராக அல்லாஹ்விடத்தில் உதவி தேடுங்கள். மேலும் அவர்களுடன் சண்டை இடுங்கள்.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 2 பக்கம் 314 சரிய்யா மூத்தா – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸில் அச்சிடப்பட்டது & அஸீரத்துல் ஹல்பியா தொகுதி 3 பக்கம் 96 பாப் ஸிக்ர் முஆஸிய்யா/கஸ்வா மூத்தா – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இவ்வாறு ஹஸ்ரத் வஹப் (ரலி) அவர்களும் அந்தப் போரில் பங்கு பெற்றிருந்தார்கள்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் அவர்கள் அறிவிக்கின்றார்கள். அதன் விவரத்தையும் மேலும் நான் விரிவாக எடுத்துக் கூறி விடுகின்றேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூத்தா போருக்காக ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா அவர்களை அமீராக நியமித்தார்கள். பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒருவேளை ஸைது அவர்கள் ஷஹீதாகி விட்டால் பின்னர் ஜாஃபர் அவர்கள் அமீராக இருப்பார்கள். ஒருவேளை ஜாஃபரும் ஷஹீதாகி விட்டால் பின்னர் அப்துல்லாஹ் பின் ரவாஹா உங்களின் அமீராக இருப்பார் என்று கூறினார்கள்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் மகாஸி, பாப் கஸ்வா மூத்தா ஹதீஸ் 4261 & முஸ்னது அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 7 பக்கம் 505 ஹதீஸ் எண் 22918 – 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அதைப் பற்றிய விளக்கம் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வளவு தான் எழுதியுள்ளார்கள்.

ஓர் அறிவிப்பில் வருகிறது. அங்கு மிக அருகில் ஒரு யூதன் அமர்ந்திருந்தான். அப்போது அவன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து மேற்கண்ட விஷயத்தை செவியுற்றான். அப்போது ஸைது அவர்கள் அவனிடத்தில் வந்தார்கள். மேலும் வந்து கூறினார்கள். முஹம்மது (ஸல்) அவர்கள் உண்மையாளர்கள் என்றால், உங்கள் மூன்று நபர்களில் எவரும் உயிருடன் தப்பித்து வரப்போவதில்லை என்று கூறினார். அதற்கு ஹஸ்ரத் ஸைது அவர்கள் கூறினார்கள்: நான் உயிருடன் தப்பித்து வந்தாலும் சரி; வரவில்லை என்றாலும் சரி, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் உண்மையான நபியும், தூதரும் ஆவார்கள்.

(ஃபரீஸா தப்லீக் அவர் அஹ்மதி ஹவாதீன், அன்வாருல் உலூம் தொதி 18 பக்கம் 405,406)

இந்தப் போரின் நிலவரங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ்வின் புறமிருந்து கிடைத்தன.

இது தொடர்பாக ஓர் அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம்

(ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஸைது அவர்கள் கொடியை ஏற்றிப் பிடித்தார்கள். அவர்கள் ஷஹீதாக்கப்பட்டார்கள். பின்னர் ஜாஃபர் அவர்கள் அதனைப் பிடித்துக் கொண்டார்கள். அவரும் ஷஹீதாக்கப்பட்டார். பின்னர் அப்துல்லாஹ் பின் ரவாஹா அவர்கள் கொடியைப் பிடித்தார்கள். அவர்களும் ஷஹீதாக்கப்பட்டார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த செய்தியை கூறிக் கொண்டிருந்தபோது அன்னாரது கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடிக் கொண்டிருந்தது. பின்னர் அன்னார் கூறினார்கள்: அந்தக் கொடியை ஹஸ்ரத் காலித் பின் வலீத் அவர்கள் பற்றிப் பிடித்துக் கொண்டார்கள். அவர்களுக்கு வெற்றியும் கிடைத்தது.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் ஜனாயிஸ் ஹதீஸ் எண் 1246)

அல்லாஹ் இந்த சஹாபாக்களின் அந்தஸ்தை உயர்த்திக் கொண்டே செல்வானாக.

இவர்களின் இந்த நற்குறிப்பிற்குப் பிறகு இனி நான் சில மர்ஹூமீன்களின் நற்குறிப்பை எடுத்துக் கூறுவேன். அவர்களின் ஜனாஸா தொழுகையையும் இன்று நான் தொழ வைப்பேன்.

முதலாவது நற்குறிப்பு மதிப்பிற்குரிய மலிக் முஹம்மது அக்ரம் சாஹிப் முரப்பி அவர்களுடையதாகும். ஏப்ரம் மாதம் 25 ஆம் தேதி நேற்று மான்செஸ்டரில் அன்னாரின் மரணம் நிகழ்ந்தது. إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ-

அன்னாரின் ஜனாஸா இங்கு வந்துள்ளது. தொழுகைக்குப் பிறகு அன்னாரது ஜனாஸா தொழுகையை நான் வெளியே சென்று நடத்துவேன். இன்ஷா அல்லாஹ்.

1947 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 2 ஆம் தேதி குஜ்ராத் மாவட்டம் மலிக்வால் என்ற ஊரில் அன்னார் பிறந்தார்கள். 1961 ஆம் ஆண்டு பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைந்தார்கள். அன்னாருடைய மூத்த சகோதரரும் முதலில் அஹ்மதியாகவே இருந்தார். அவரும் சுயமாக பைஅத் செய்திருந்தார். அவரின் மூலமாக மர்ஹூம் பைஅத் செய்தார்கள். அவர் ஒரு கட்டுரையில் எழுதியிருந்தார். எனக்கு நினைவில் உள்ளது. நான் ரப்வாபில் கல்வி கற்பதற்காக வருகின்றேன். மேலும் பின்னர் அதன் பிறகு பைஅத் செய்து விட்டார். ரப்வாவின் சூழலின் தாக்கத்திற்கு ஆளானார்.

எவ்வாறிருப்பினும் 1962 ஆம் ஆண்டு அன்னார் தனது பைஅத்திற்குப் பிறகு தன்னை ஜமாஅத்திற்காக அர்ப்பணித்துக் கொண்டார். B.A படித்து முடித்த பிறகு அன்னார் ஷாஹிது மற்றும் அரபி டிகிரியும் படித்து முடித்தார். 1971 ஆம் ஆண்டு முரப்பியாக பணியமர்த்தப்பட்டார். ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் அன்னாரது திருமணத்தை 1970 ஆம் ஆண்டு மவ்லவி அப்துல் கபூர் சாஹிப் அவர்களின் மகளாகிய அம்மத்துல் கரீம் சாஹிபா அவர்களுடன் நடத்தி வைத்தார்கள்.

அன்னார் பாகிஸ்தானில் பல்வேறு இடங்களிலும் பின்னர் வெளிநாடுகளிலும் தொண்டாற்றுவதற்குரிய பாக்கியத்தைப் பெற்றார்கள். யூ.கே வில் ஆக்ஸ்ஃபோர்டு கிலாஸ்கோ, மான்ஸெஸ்டர் கிலாஸ்கோ மற்றும் கார்டஃப் ஆகிய ஜமாஅத்துகளில் மொத்தம் 30 ஆண்டுகள் தொண்டாற்றும் பாக்கியம் பெற்றுள்ளார்கள். அவர்களுடைய மொத்த தொண்டிற்கான ஆண்டு 48 ஆண்டுகளாகும்.

யூ.கே விலும் நாயிப் அப்ஸர் ஜல்ஸா காவாகவும் தொண்டாற்றும் பாக்கியம் பெற்றிருந்தார்கள். பெரும் பெரும் இடங்களில் பல ஆண்டுகள் பாகிஸ்தானின் பல்வேறு இடங்களில் பணியமர்த்தப்பட்டுள்ளார்கள். கேம்பியாவிலும் மிக நீண்ட காலம் இருந்துள்ளார்கள். பின்னர் மீண்டும் பாகிஸ்தான் திரும்பினார்கள். பாகிஸ்தான் ரப்வாவில் வகாலத் தப்ஸீரிலும் பணியமர்த்தப்பட்டார்கள். 81 வரை ரப்வாவில் இருந்தார்கள். 89 முதல் 2018 வரை யூ.கே வில் பல்வேறு தொண்டுகளை ஆற்றியுள்ளார்கள். தனது நோயின் காரணமாக அல்லாமல் தமது வயதின் காரணமாக 2007 ஆம் ஆண்டு இவர் பணி ஓய்வு பெற்றிருந்தார். 2007 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் மீண்டும் பணியமர்த்தப்பட்டார். 2018 வரை தொண்டாற்றுதற்காக பாக்கியம் கிடைத்தது. கடந்த நாட்களில் நோயின் காரணமாக அவரால் சுறுசுறுப்பாகச் செயல்பட முடியாமல் போனது.

எனவே மீண்டும் ஒரு முறை அவருக்குப் பணி ஓய்வு வழங்கப்பட்டது. ஆனால் நாம் இவ்வாறு கூறுவோம். அவர் சில மாதங்கள் மட்டுமே சட்டத்திலிருந்து விலக்குப் பெற்று ஜமாஅத்திற்கு தொண்டாற்றி இருக்கின்றார். ஒரு வகையில் அன்னார் ஜமாஅத்திற்கு தொண்டாற்றியவாறே தமது உயிரை துறந்துள்ளார்.

யூ.கே வின் அமீர் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: அன்னார் மிகச் சிறந்த உழைப்பாளியாகவும், கீழ்ப்படிதல் கொண்ட நபராகவும் இருந்தார்கள். அவரது இயல்பில் பொறுமை இருந்தது. அவர்களிடத்தில் எந்த ஜமாஅத் ஒப்படைக்கப்பட்டாலும் அதனை உழைப்புடனும், நேர்மையுடனும் செய்து வந்தார்கள். ரிப்போர்ட் செய்யும் பழக்கம் இருந்தது. அவருக்கு உடனடியாக ரிப்போர்ட் வழங்கப்பட்டு வந்தது. மான்செஸ்டர் இடத்தில் நியமிக்கப்பட்டிருந்தார்கள். அப்போது அங்கு தாருல் அமான் பள்ளிவாசல் கட்டப்பட்டது. மலிக் சாயிப் அவர்கள் மஸ்ஜிது ஃபண்டை வசூல் செய்வதில் மிகவும் முக்கிய பங்கு ஆற்றியிருக்கின்றார்கள்.

அதாவுல் முஜீப் சாஹிப் ராஷித் அவர்கள் கூறுகின்றார்கள்: அக்ரம் சாஹிப் அவர்கள் மிகவும் நல்ல பண்புகளையும் சிறப்புகளையும் கொண்டவராக இருந்தார்கள். மிகவும் நல்ல மனிதராகவும், நேர்மையானவராகவும், மிகவும் கலப்பற்றத்தன்மை கொண்ட நபராகவும், தன்னை மாய்த்துக் கொள்கின்ற அஹ்மதியாகவும் அன்னார் திகழ்ந்தார்கள். தப்லீக்கில் மிக அதிக ஆர்வம் இருந்தது. கிலாஃபத்திற்குக் கட்டுப்படுவதில் மிக உயர் தரமான அந்தஸ்தை உடைய மார்க்கத் தொண்டராக அன்னார் இருந்தார்கள்.

மஜீது சியால்கோட்டி சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்: அன்னார் எண்ணற்ற சிறப்பம்சங்களுக்கு உரிமை படைத்தவர். மிகவும் தனித்தன்மை வாய்ந்த சிறப்பம்சம் என்னவென்றால், அவர் கிலாஃபத்திற்கு முன்மாரியான காதிமாக இருந்தார். தப்லீக் செய்வதில் அவருக்கு மிகுந்த ஆர்வம் இருந்தது.

அன்னாரைப் பற்றி சியால்கோட்டி சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்: நாங்கள் எங்களின் மாணவப் பருவ காலகட்டத்தில் விடுமுறையில் எங்கள் ஊருக்கு ஒரு முறை வந்தோம். அங்கும் கூட அவர் தப்லீக் செய்யத் தொடங்கி விட்டார்கள். பின்னர் தப்லீக்கின் மும்முரமானார்கள். குத்தாம் மற்றும் அன்ஸார்களின் ஏற்பாட்டிற்கேற்ப தொண்டாற்றுவதற்குத் தனது விடுமுறையை அர்ப்பணித்து விட்டார்கள். எப்போதும் மிகவும் கட்டுப்படுதலுடன் தமது வாழ்க்கையை கழித்தார்கள்.

தனிச்செயலர் அலுவலகத்தில் பணியாற்றுகின்ற அஸ்லம் காலித் சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்: அன்னார் என்னுடைய மிக நெருங்கிய உறவினராக ஆகி இருந்தார்கள். அன்னாருடைய சொற்பொழிவு எங்கெல்லாம் நிகழ்த்தப்படுமோ அன்னார் மிக அன்புடன் மக்களின் உள்ளங்களை வெற்றி கொள்வார்கள். நோயின் காலத்திலும் கூட அன்னார் எங்கெல்லாம் தொண்டாற்றினார்களோ குறிப்பாக மான்செஸ்டர் ஜமாஅத்தின் சகோதரர்கள் மிகவும்

அன்புடன் அன்னாரை நினைவு கூர்ந்தார்கள். ஜமாஅத்தின் குழந்தைகளிடமும், இளைஞர்களிடம் பரிவான தொடர்வை பைத்திருந்தார்கள்.

அதற்குரிய ஒரு உதாரணத்தை கூறியவாறு அவர்கள் கூறுகின்றார்கள்: காலித் சாஹிப் அவர்கள் என்னிடத்தில் கூறினார்கள். இப்போது பெரியவர்கள் ஆகி விட்ட அந்த குழந்தைகள் அவர்களுக்கு இப்போது திருமணமும் ஆகி விட்டது. அவர்களில் ஒரு குழந்தை தனது திருமணத்திற்குப் பிறகு முதலாவது குழந்தை பிறந்த போது இரவு இரண்டரை மணிக்கு எனக்கு போன் செய்து கூறினார். முரப்பி சாஹிப் எனக்கு மகன் பிறந்துள்ளான் என்று கூறினார். முதலில் அக்ரம் சாஹிப் கூறுகின்றார்கள். இந்த தகவலை இப்போது கொடுப்பதற்கான நேரமா? இரவிலோ அல்லது பகலிலோ இதை கூறியிருக்க முடியுமே என்று கூறினார்கள். ஆனால் அந்த நபருக்கு முரப்பி சாஹிபுடன் ஓர் அன்பு இருந்தது.

அவர் அடுத்த வரிகளின் எனது வாயை அடைத்து விட்டார். அந்த இளைஞர் கூறினார். முரப்பி சாஹிப்! நான் உடன்படிக்கை செய்திருந்தேன். அல்லாஹ் எனக்கு எப்போது குழந்தை பாக்கியம் அருளினாலும் எல்லோரையும் விட முதலில் உங்களுக்கே தகவல் தருவேன் என உடன்படிக்கை எடுத்திருந்தேன். அதன்படி இப்போது நான் உங்களுக்கு கூறி விட்டேன்.

ஆக, மக்களுடனும் அவருக்கு ஜமாஅத்தின் மக்கள் மீதும் இருந்த அன்பு மற்றும் நேசம் இதுவே ஆகும். அல்லாஹ் அவரின் அந்தஸ்தை உயர்த்துவானாக. பாவமன்னிப்பை வழங்குவானாக. அவரது குடும்பத்திற்கு பொறுமையையும், தைரியத்தையும் வழங்குவானாக.

இது அன்னாரது நேரடியாகக் கொண்டு வரப்பட்ட ஜனாஸாவாகும். நான் ஏற்கனவே கூறியது போன்று வெளியே சென்று அந்த ஜனாஸாவை தொழ வைப்பேன்.

இரண்டாவது ஜனாஸா காயிப் ஜமாஅத்தின் முபல்லிக்காகிய சவுத்ரி அப்துஸ் ஷகூர் சாஹிப் அவர்களுடையதாகும். அன்னார் சியால்கோட்டைச் சார்ந்த சவுத்ரி அப்துல் அஸீஸ் அவர்களின் மகனாவார்கள். ஏப்ரல் 12 ஆம் தேதி அன்னார் மரணமடைந்தார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ-

1935 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10 ஆம் தேதி அன்னார் பிறந்தார்கள். பிறப்பால் அஹ்மதி ஆவார்கள். அன்னாருடைய பாட்டனார் 1901 ஆம் ஆண்டு பைஅத் செய்திருந்தார்கள். அப்துல் ஷகூர் சாஹிப் M.A படித்தார்கள். பின்னர் ஷாஹிது பட்டத்தையும், பின்னர் மவ்லவி ஃபாஸில் பட்டத்தையும் பெற்றார்கள். 1986 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வாழ்க்கையை அர்ப்பணித்தார்கள். அதற்கு முன்பாக இரயில்வே துறையில் டைபிஸ்ட் கிளார்க்காக பணி செய்து வந்தார்கள். 1962 ஆம் ஆண்டு மவ்லவி ஃபாஸிலின் கேள்வித் தாழ்களில் தேர்ச்சி பெற்றார்கள். 1963 ஆம் ஆண்டு ஜாமிஆ அஹ்மதிய்யாவின் ஷாஹிது தேர்வில் தேர்ச்சி பெற்றார்கள்.

1963 ஆம் ஆண்டு ஜூலை மாதத்திலிருந்து அன்னாரது பணி நியமனம் வகாலத்தே மால் மற்றும் வகாலத்தே சானி ஆகிய இரு துறைகளிலும் நிகழ்ந்தது. பின்னர் ரப்வாவின் பல்வேறு அவலுலகங்களின் மத்தியில் பணியாற்றி வந்தார்கள். 1964 ஆம் ஆண்டு தப்லீக் செய்யும் நோக்கில் சிரோலியோன் அனுப்பி வைக்கப்பட்டார்கள். 1968 ஆம் ஆண்டு நபம்பர் மாதம் வரை அங்கு தொண்டாற்றும் பாக்கியம் பெற்றார்கள். 1970 ஆம் ஆண்டு முதல் டிசம்பர் 1973 ஆண்டு வரை கானாவில் தங்கியிருந்து தொண்டாற்றினார்கள். 1975 முதல் 1978 வரை கேம்பியாவில் தங்கி தொண்டாற்றினார்கள். 1980 ஆம் ஆண்டு பிப்ரவரியிலிருந்து ஏப்ரல் 1986 வரை லயிபேரியாவில் ஜமாஅத்திற்கு தொண்டாற்றியுள்ளார்கள். இந்த நாடுகளில் அன்னார் அமீராகவும், மிஷனரி இன்சார்ஜாகவும் தொண்டாற்றுவதற்கு பாக்கியத்தைப் பெற்றார்கள். 1990 ஆம் ஆண்டில் அன்னார் நாயிப் வகீலுத் தப்ஸீர் என்ற முறையில் பணியமர்த்தப்பட்டார்கள். நாயிப் வகீலுல் மால் சாலிஹ், உமூரே கார்ஜா செயலர், செகரட்டரி ஆபாதி கமிட்டி, வகீலுல் மஸானி போன்றவற்றில் ஜமாஅத்திற்குத் தொண்டாற்றினார்கள். 1995 ஆம் ஆண்டிலிருந்து 2004 பணி ஓய்வு வரை ரீ எம்ப்ளாயாக ஜமாஅத்திற்கு மீண்டும் தொண்டாற்றும் பாக்கியத்தைப் பெற்றார்கள். கண்களில் அன்னாருக்குச் சில தொந்தரவுகள் இருந்து வந்தன. அதன் காரணமாக 2004 ஆம் ஆண்டு ஓய்வு பெற்றார்கள்.

அன்னாரின் மகன் டாக்டர் அப்துஸ் சபூர் சாஹிப் அவர்கள் அமெரிக்காவில் வாழ்ந்து வருகிறார். அவர் கூறுகின்றார்: எனது தந்தை மிகவும் எளிய மனிதராகவும், உழைப்பாளியாகவும் இருந்தார்கள். எங்களுக்கு லயிபேரியாவில் அமீர் மற்றும் மிஷனரி இன்சார்ஜ் என்ற முறையில் அவர்களின் தப்லீக் மற்றும் தர்பிய்யத் பணிகளில் முயற்சி செய்வதற்கு வாய்ப்பு கிடைத்தது. எப்போதும் மிக அதிக உழைப்புடனும் செயல்பட்டார்கள். திருக்குர்ஆன், ஹதீஸ், ஜமாஅத்தின் புத்தகங்கள் மற்றும் பைபிளில் ஒளியில் ஆதாரங்களை எடுத்து வைத்து குத்பா வழங்கி வந்தார்கள். கிறிஸ்தவம் மற்றும் முஸ்லிம்களுக்கு சான்றுகளுடன் தப்லீக் செய்து வந்தார்கள். பெரும் பெரும் அன்பிற்குரியவர்கள் அன்னாருடன் பேசி வந்தார்கள்.

பின்னர் அன்னார் கூறுகின்றார்கள்: எங்கள் அனைத்து சகோதர, சகோதரிகளின் உயர் தர கல்விக்கு மிக குறைவான வசதி வாய்ப்புகள் இருந்த போதிலும் அதனை முழுமை செய்ய வைத்தார்கள்.

மஹ்மூது தாஹிர் சாஹிப் மஜ்லிஸ் அன்ஸாருல்லாவின் காயித் உமூமியாக இருக்கின்றார். அவர் கூறுகின்றார்: மிக மறைமுகமாக தப்லீக் செய்யக் கூடியவர் ஆவார். தனது பணியை மட்டுமே பார்த்து வந்தார். நல்ல கருத்து கூறக்கூடிய இயல்பு படைத்தவர்.

நாயிப் வகீலுத் தப்ஷீராக இருக்கின்றவர் அன்னாரைப் பற்றி கூறுகின்றார்கள்: அன்னார் மிகவும் எளிமையான இயல்பைக் கொண்டவராக இருந்தார். தனது நஃப்ஸில் தன்னலமற்றவராக இருந்தார். மிகக் கண்ணியமிக்க மனிதராக இருந்தார். மிக அமைதியான குணம் படைத்தவராக இருந்தார். கிலாஃபத் மற்றும் ஜமாஅத் அமைப்பின் மீது மிகவும் நன்றியுணர்வு கொண்டவராக இருந்தார்.

ஜெர்மனியின் நாயிப் அமீர் ஹைதர் அலி ஜபர் சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்: அன்னார் ஏராளமான சிறப்பம்சங்களுக்கு அதிபதி ஆவார். நல்ல கலப்பற்ற தன்மையுடன், எளிமையான இயல்புடன் உழைக்கக் கூடியவராகவும், ஜமாஅத்தின் செல்வங்களைப் பங்கிட்டுக் கொடுப்பதில் கவனமாக செயல்பட்டு வந்தவர். விதிமுறைகளைப் பேணக்கூடியவராக இருந்தார். அப்போது ஜமாஅத்திற்கென்று தனி நூலகம் இருந்தது. ஜமாஅத்தின் புக் ஷாப் லயிபேரியாவில் இருந்தது. மிக நல்ல முறையில் அதனை நடத்தி வந்தார்.

அதிலிருந்து கிடைத்த தொகையை பள்ளிவாசல் கட்டுவதற்காக கொடுத்து விட்டார். கொஞ்ச நேரம் கழித்து ஒரு சிறிய காம்லக்ஸ் ஒன்றை கட்டினார். அதில் நூலகமும் இருந்தது. விருந்தினர் இல்லமும் இருந்தது; ஆண், பெண் என இருவருக்கும் தனித்தனி தொழுமிடங்கள் அமைக்கப்பட்டன. முரப்பி வீடும் அங்கிருந்தது. பள்ளிவாசல் கட்டுமானப் பணியின் போது தனது கரத்தால் கூலி ஆட்களுடன் சேர்ந்து வேலை செய்து வந்தார்கள். ஒன்று சுயமான

வருமானத்திற்கான ஏற்பாடு செய்து பள்ளிவாசலைக் கட்டினார்கள். காம்ப்ளக்ஸும் கட்டினார்கள். பின்னர் தானே கூலி வேலை செய்தார்கள்.

ஹைதர் அலி சாஹிப் அவர்கள் என்னை விட சீனியராக இருந்தார். நான் ஜூனியராக இருந்தேன். நான் அவரிடமிருந்து சார்ஜ் பெற்றேன். அவரை வழியனுப்பி வைத்தேன். பள்ளிவாசல் மற்றும் மிஷன் ஹவுஸ் கட்டுவதற்கான விவரங்கள் கூறிக் கொண்டிருந்தேன். அவர்மிக அன்புடன் இந்த அனைத்துப் பணிகளையும் செய்தார்.

அவர் மிக பணிவுடன் கூறினார்: எனக்கு முன்பு ஒரு முபல்லிக்கிற்கு ஒரு இடத்தை வாங்கும் நற்பாக்கியம் கிடைத்தது. மேலும் அல்லாஹ் எனது காலத்தில் இதனை முழுமை செய்வதற்கான நற்பாக்கியத்தைத் தந்திருக்கின்றான். எனது காலம் முடிந்து விட்டது. மேலும் உண்மையில் அல்லாஹ்வின் அருள் தான் நமக்கு இப்படிப்பட்ட நற்பாக்கியத்தை வழங்கியுள்ளது. மர்ஹூம் மூஸியாக இருந்தார். அன்னார் தமக்குப் பிறகு மனைவி மற்றும் இரண்டு மகள்கள் மற்றும் மூன்று மகன்களை விட்டுச் சென்றுள்ளார்கள். அல்லாஹ் அவர்களின் அந்தஸ்தை உயர்த்துவானாக.

மூன்றாவது ஜனாஸா மதிப்பிற்குரிய முஹம்மது சாலிஹ் முஹம்மது சாஹிப் அவர்களுடையதாகும். அவர் வக்ஃபே ஜதீதின் முஅல்லிம் ஆவார். ஏப்ரல் மாதம் 21 ஆம் தேதி 2019 ஆம் ஆண்டு வஃபாத்தாகி விட்டார். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ۔

அவரின் முப்பாட்டனார் மலிக்குல்லாஹ் பக்ஸ் சாஹிப் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபி ஆவார். அன்னார் சூரிய சந்திர கிரகணத்தின் அடையாளத்தைப் பார்த்து நடைபாதையாக காதியான் சென்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் பைஅத் செய்யும் நற்பாக்கியத்தைப் பெற்றார்கள். அன்னாரின் தந்தையார் மதிப்பிற்குரிய குலாம் முஹம்மது சாஹிப் அவர்களும் ஜமாஅத்தின் ஆரம்பகால முஅல்லிம்களில் ஒருவராக இருந்தார்கள். அன்னாரின் தந்தையாரும் முஅல்லிமாக இருந்தார்கள்.

1959 ல் மர்ஹூம் பிறந்தார்கள். 1976 ல் ஜாமிஆ அஹ்மதிய்யாவில் இடம் பெறுவதற்கு முயற்சி செய்தார்கள். ஆனால் வயது அதிகமாக இருந்ததினால் அவர்களுக்கு ஜாமிஆவில் இடம் கிடைக்கவில்லை. எனவே கோட்ரி என்ற இடத்தில் ஒரு மில்லில் அன்னாருக்கு வேலை கிடைத்தது.

அன்னாரது மகன் எழுதுகின்றார்: எனது பாட்டனார் மலிக் முஹம்மது குலாம் சாஹிப் முஅல்லிமாக இருந்தார். அவரைச் சந்திப்பதற்காக எவராவது கோட்டரிக்குச் சென்றால் அங்குள்ள சூழல் மாறிவிடும். அன்னார் உடனடியாக ஒரு வழிகாட்டல் அவருக்கு வழங்கினார்கள். அதாவது நீங்கள் வேலையை விட்டு விடுங்கள். நீங்கள் வக்ஃபே ஜதீதின் முஅல்லிமாக ஆகி விடுங்கள் என்று கூறினார்கள்.

அப்போது அன்னாருக்குத் திருமணமும் ஆகி இருந்தது. அந்த ஊதியத்தில் அங்கு அவருக்கு 450 ரூபாய் ஊழியமாக வழங்கப்பட்டது. அது அக்காலத்தில் பெரும் பணமாக கருதப்பட்டது. முஅல்லிம் வகுப்பிற்கு வந்து கலந்து கொண்டு அதன் பிறகு முஅல்லிம் ஆனார்கள். ஜமாஅத் அவருக்கு 135 ரூபாய் மட்டுமே அலாவன்ஸாகக் கொடுத்து வந்தது. ஆனால் அதை அன்னார் மிகப்பெரிய கவுரவமாக கருதி வந்தார்கள்.

அல்லாஹ் எனக்கு மார்க்கத்திற்குத் தொண்டாற்றும் பாக்கியத்தை வழங்கியுள்ளான் என்றே கருதி வந்தார்கள். ஏறக்குறைய 1/3 வருமானத்தில் வக்ஃப் செய்து தொடங்கினார். அது மிகப் பெரிய காரியமாகும். இதற்கு முன்பு அவர் உலகத்தை சம்பாதிக்கக் கூடியவராக இருந்தார்.

அன்னாரின் மகள் எழுதுகின்றார்: அவரும் ஒரு முரப்பி ஆவார். எனது தாயார் கூறி வந்தார். அன்னாருக்கு ஒரு கிராமத்திற்குப் பணிமாற்றம் நடந்தது. அங்கு ஒரு நீண்ட காலமாக ஒரு முஅல்லிம் ஹவுஸ் பூட்டப்பட்டிருந்தது. வீடு இடிந்திருந்தது. எனவே அன்னாரின் தகப்பனார் நீண்ட காலமாக தண்ணீரையும், மண்ணையும் எடுத்து வந்தார்கள். கணவன் மனைவி இருவரும் சேர்ந்து செங்கற்களை எடுத்து வந்து வீட்டை கட்டினர். கட்டிடம் உருவானதும் இருவரும் ஒருவருக்கொருவர் உதவி செய்தவாறு தமது தங்குமிடத்தைத் தாமே தயார் செய்தனர். அங்கு எந்த இடமும் இருக்கவில்லை. இவர்கள் ஆரம்பகால முஅல்லிம்கள் ஆவர். சிந்து பகுதியிலும் அவர்கள் பெரும் தியாகங்கள் செய்துள்ளனர்.

அன்னாரின் மகன் எழுதுகின்றார்: நிகர்பார்கரில் என்னிடத்தில் தங்குவதற்கான ஏற்பாடுகள் இல்லை. எனவே கூட்டத்தின் போது சந்திக்கும் போதும், திரும்பிச் செல்லும் போதும் தனக்காக முழு மாதத்திற்கான ரேஷன் மற்றும் ஹோமியோபதி மருந்துகளை அவர் எடுத்துச் செல்வார். மற்ற மருந்துகளையும் அவர் எடுத்துச் செல்வார். ஏனென்றால், அந்த பகுதி ரிமோட் பகுதியாக இருந்தது.

ஒரு முறை இதே போன்று கூட்டத்திற்காக வந்திருந்தார். திரும்பிச் செல்லும்போது வழிப்பாதையை மறந்து விட்டார். அந்தப் பகுதியின் பெரும் பகுதி பாலைவனமாக இருந்தது. மணலில் நடந்த பாதங்களின் அடிச்சுவடுகளை வைத்து தான் வழிப்பாதைகளை மனிதன் அடையாளங்கண்டு கொள்ள முடியும். ஆனால் இவர் வழிப்பாதையை அடையாளங்கண்டு கொள்ள முடியாமல் போனது. இதற்கிடையில் அவர் கொண்டு வந்த தண்ணீர் தீர்ந்தது. தாகம் மற்றும் சோர்வின் காரணமாக மயக்கமுற்றுக் கீழே விழுந்தார். அப்போது இரண்டு நபர்கள் ஒட்டகத்தில் அந்த இடத்தை கடந்து சென்றனர். அப்போது அவர்கள் ஒரு நபர் மணலில் விழுந்து கிடப்பதைப் பார்த்தனர். அருகில் வந்து பார்த்த போது டாக்டர் சாஹிப் என்பதை அறிந்து கொண்டனர்.

ஏனென்றால் இவர் அந்தப் பகுதியில் மருந்துகள் கொடுத்து வந்தனர். எனவே அன்னாரை டாக்டர் சாஹிப் என்று அவர்கள் அறிந்திருந்தனர். எனவே அவர்கள் அன்னாருக்குத் தண்ணீர் கொடுத்தனர். இரவு அங்கேயே தங்க வைத்தனர். அடுத்த நாள் சென்டருக்கு கொண்டு சென்று விட்டு விட்டார்கள்.

இவர்கள் எழுதுகின்றார்கள்: தனது பிள்ளைகளுக்கு எப்போதும் தொழுகையைப் பேணும்படி அறிவுரை செய்து வந்தார்கள். முறையாக மற்றும் தொடர்ச்சியாக தஹஜ்ஜுத் தொழுது வந்தார்கள். மரணமடைந்த நாளிலும் தஹஜ்ஜுத் தொழுதிருந்தார்கள். தமது தாயாரையும் எழுப்பினார்கள். மக்களை மிகவும் சேசிக்கக் கூடியவராக இருந்தார்கள். ஒருவர் தன்னிடத்தில் தவறாக நடந்து கொண்டாலும் அவர் பொறுமையாகவே இருப்பார்கள். ஒருபோதும் பதில் கூற மாட்டார்கள்.

தொடர்பை ஏற்படுத்துவதில் மிகச்சிறந்தவராக இருந்தார்கள். மக்கள் அவர் மீதான நம்பிக்கையின் காரணமாக அவரிடத்தில் அமானிதங்களை வைத்து விட்டுச் செல்வார்கள். நான் அவரது குடும்பத்தின் சார்பாக கூறுகின்றேன். பகைமை ஏற்பட்டால் அவர் எப்போதும் சமாதானத்தை ஏற்படுத்தவதற்கு முயற்சி செய்வார். மர்ஹூம் மூஸியாக இருந்தார். அவர் தமது உறவினர்களில் மனைவியையும், மூன்று மகன்களையும், மூன்று மகள்களையும் தமது நினைவாக விட்டுச் சென்றுள்ளார். அன்னாரது ஒரு மகன் முபாரக் அஹ்மது முனீர் சாஹிப் ஆவார். அவர் தற்போது பொர்கினோஃபாஸோவில் முரப்பியாகத் தொண்டாற்றி

வருகின்றனர். இதன் காரணமாக தமது தந்தையின் மரணத்தின்போது அவர் பாகிஸ்தான் செல்ல முடியவில்லை.

அல்லாஹ் மர்ஹூமின் அந்தஸ்தை உயர்த்துவானாக. அவருடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. அவரது பிள்ளைகளுக்கும் இந்த உணர்வு மற்றும் தியாக மனப்பான்மையுடன் ஜமாஅத்திற்குத் தொண்டாற்றும் நற்பாக்கியத்தை வழங்குவானாக.

நான்காவது ஜனாஸா காயிப் தன்ஸானியாவைச் சேர்ந்த மதிப்பிற்குரிய மவேஷே ஜமா சாஹிப் அவர்களுடையதாகும். அன்னார் மார்ச் மாதம் 13 ஆம் தேதி மரணமடைந்து விட்டார்கள். إِنَّا لِلَّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ-

அன்னார் 1933,34 ஆம் ஆண்டு தன்ஸானியாவின் மேரு கோரு ரீஜனில் பிறந்தார்கள். 1967 ஆம் ஆண்டு அஹ்மதிய்யத்தில் இணைந்தார்கள். அன்னார் ஜமாஅத்தில் இணைந்த சம்பவம் இவ்வாறாகும்.

சுன்னத் ஜமாஅத் ஆலிம்களிடம் இந்த பழக்கும் இருந்தது. அதாவது இறந்து போன நபர்களுக்காவும், இறந்து போன குழந்தைகளுக்காகவும் அகீகா ஓரிடத்தில் கொடுத்து வந்தார்கள். அவருக்கு இறந்து போன குழந்தைகளுக்காக இது என்ன கதம்? இது என்ன அகீகா? என்ற விஷயத்தில் கருத்து வேறுபாடு இருந்தது.

மேலும் அவர் கூறுகின்றார்: ஏனென்றால் சில ஆலிம்கள் இறந்து போன குழந்தைகளுக்கு அகீகா கொடுக்க வேண்டு என்ற கொள்கை உடையவர்களாக இருந்தனர். அன்னார் இஸ்லாமிய போதனைகளில் அப்படி எந்தவொரு போதனையையும் கண்டிருக்கவில்லை. மவ்லவிகள் செய்து வந்த காரியத்தில் அவர் மிகவும் மனமுடைந்து இருந்தார். முஸ்லிம்களின் இழிநிலையைக் கண்டு வருந்தினார்.

அல்லாஹ்விடத்தில், அல்லாஹ்வே! நீ ஈஸா (அலை) அவர்களை இஸ்லாத்தை மீண்டும் உயிரூட்டுவதற்காக இறக்குவாயாக என்று துஆ செய்தார்கள்.

மிஷனரி இன்சார்ஜ் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: அவரைச் சந்தித்தபோது ஜமீலுர் ரஹ்மான் ரஃபீக் சாஹிப் அங்கு முபல்லிகாக இருந்தார். தற்போது வகீலுல் இஷாத்தாக பாகிஸ்தானில் தொண்டாற்றுகின்றார்கள். ஆக, முபல்லிக் சாஹிப் அவர்களைச் சந்தித்தபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒரு நபிமொழியை எடுத்துக் கூறினார்கள். அதாவது எவர் காலத்தின் இமாமை அடையாளங்கண்டு கொள்ளவில்லையோ அவர் அறியாமையின் மரணத்தை அடைவார் என்ற ஹதீதை எடுத்துக் கூறினார்.

அதைக் கேட்டதும் அவர் நான் உண்மையான முஸ்லிமாக இல்லையே என்று எண்ணினார். உடனே காலத்தை வீணடிக்காமல் உடனே பைஅத் செய்து விட வேண்டும் என எண்ணினார். பைஅத்திற்குப் பிறகு தமது ஊருக்குச் சென்றார். தனது சகோதர சகோதரிகள் அனைவருக்கும் தப்லீக் செய்தார். குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும் தப்லீக் செய்தார். அனைவரையும் ஒன்று திரட்டி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தொடர்பாக தப்லீக் செய்தார்.

அதே வருடத்தில் அவரது சகோதரர் ஐதி மரணம் அடைந்து விட்டார். ஜமால் சாஹிபின் மனைவி ஜமாஅத்தில் இணைந்து கொண்டார். மர்ஹூம் மிகக் கடுமையான எதிர்ப்பை சந்திக்க நேரிட்டது. ஆனால் கொஞ்சம் கொஞ்சமாக மக்கள் ஜமாஅத்தில் இணைய தொடங்கி விட்டனர்.

இன்சார்ஜ் சாஹிப் எழுதுகின்றார்: மக்யூனி என்ற ஒரு ஜமாஅத் இருக்கிறது. அது ஒரு முன்னுதாரனமான ஜமாஅத்தாகும். அது மர்ஹூமின் முயற்சியினால் உருவான ஜமாஅத்தாகும். ஜமாஅத்தில் இணைந்த பிறகு அவரது ஒவ்வொரு செயலிலும் அது வெளிப்பட்டு வந்தது. அவர் கிலாஃபத்தின் மீது எல்லையற்ற அன்பு கொண்டிருந்தார்.

முபல்லிக்மார்களையும், ஜமாஅத்தின் பொறுப்பாளர்களையும் கண்ணியப்படுத்தி வந்தார். ஜமாஅத் அமைப்பை மிகவும் கண்ணியப்படுத்திப் பேணி வந்தார். தப்லீக்கில் மிகவும் ஆர்வமும் உணர்வும் இருந்தது. எப்போதும் தப்லீக் செய்து வந்தார். தப்லீக்கிற்கான எந்த சந்தர்ப்பத்தையும் கைவிட்டதில்லை. சந்தாக்களை செலுத்துவதில் முதல் வரிசையில் பங்கு பெற்று வந்தார்.

இன்னும் சொல்வதென்றால் ஏதாவது சந்தா கொடுக்க வேண்டுமே என்ற கவலையில் இருந்து வந்தார். தற்காலிகமான உலகிற்கு அவரது பார்வையில் எந்த முக்கியத்துவமும் கொடுத்ததில்லை. அவர் மூஸியாக இருந்தார். மக்களுக்கு இந்த அருளுக்குரிய அமைப்பைக் பற்றிக் கூறி வந்தார்.

தொழுகையை நிலைநாட்டுவதிலும் அவருக்கு நிகர் அவராகவே இருந்தார். ஐவேளை தொழுகைகளை மிகவும் பேணி வந்தார். தனது பிள்ளைகளையும், பேரன் பேத்திகளையும் அதன் பக்கம் கவனம் செலுத்துமாறு அறிவுரை செய்து வந்தார். மிக ஆர்வத்துடன் தஹஜ்ஜுத் தொழுது வந்தார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அதிகமான துஆக்களை மனனம் செய்திருந்தார்.

1987 முதல் 1990 ற்கு இடைப்பட்ட காலத்தில் நாங்கள் மூன்று சகோதரர்கள் தன்ஸானியா ஜாமிஆவில் படித்துக் கொண்டிருந்தோம். முபஷ்ஷிர்க்கான பாடத்திட்டம் அங்கு தான் இருந்தது. எனக்கு நினைவில் உள்ளது. ஒரு முறை விடுமுறை காலத்தில் சகோதரர்களாகிய நாங்கள் எங்களுக்குள் ஆலோசனை செய்து கொண்டோம். நம்மில் ஒருவர் ஜாமிஆவின் படிப்பை விட்டு விட்டு வீட்டிற்கு வந்து விட வேண்டும். பெற்றோர்களின் அன்றாடப் பணிகளில் உதவி செய்ய வேண்டும் என்று ஆலோசனை செய்தோம். நாங்கள் இதைப் பற்றி எங்கள் தகப்பனாரிடம் கூறியபோது இதனை அவர்கள் வெறுத்தார்கள்.

ஷம்வூன் ஜம்ஆ சாஹிபின் மகன் கூறுகின்றார்: நான் அந்த நாளை ஒருபோதும் மறக்கவில்லை. எனது தந்தை மிகவும் கம்பீரமான நபராக இருந்தார். அவர் எங்களுக்குப் புரிய வைத்தார். அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வையுங்கள். ஜாமிஆவின் படிப்பைத் தொடருங்கள். படிப்பை ஒருபோதும் விட்டு விடக்கூடாது என்று எங்களுக்கு அறிவுரை கூறினார்கள்.

ஜமாஅத்திற்குத் தொண்டாற்றுவதற்கான ஆன்மாவை மூன்று குழந்தைகளின் உள்ளங்களிலும் அவர் ஊதி இருக்கின்றார் என்றே கூற வேண்டும். அல்லாஹ் அவருடன் கருணையுடனும், பாவமன்னிப்புடனும் நடந்து கொள்வானாக. அந்தஸ்தை உயர்த்துவானான. அன்னாரின் சந்ததிகளையும் உண்மையான மார்க்கத் தொண்டராகவும், மார்க்க இஸ்லாமிய சேவகராகவும் ஆக்குவானாக.

நான் ஏற்கனவே கூறியது போன்று ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு இவர்கள் அனைவரது ஜனாஸா தொழுகையையும் நான் தொழ வைப்பேன்.

மலிக் அக்ரம் சாஹிப் அவர்களின் ஜனாஸா இங்கு வந்துள்ளது. எனவே நான் வெளியே சென்று தொழ வைப்பேன். ஜமாஅத் சகோதரர்கள் பள்ளிவாசலுக்குள்ளேயே அமர்ந்து தொழுகையில் பங்கு பெறவும்.

EDITOR
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
Muallim. A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 4 Thursday 30 May 2019 Issue No. 22

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

## ஜாமிஆ அஹ்மதிய்யா காதியானின் 2019 –ற்கான மாணவர் சேர்க்கை

ஸய்யிதுனா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களால் நிறுவப்பட்ட இந்த அருளுக்குரிய ஜாமிஆவிலிருந்து தற்போது வரை நூற்றுக்கணக்கான மார்க்க அறிஞர்களும், கண்ணியத்திற்குரிய ஆலிம்களும் வெளிவந்து முழு உலகிற்கும் இஸ்லாத்தின் உண்மையான போதனையைக் கொண்டு சேர்ப்பதில் தமது கடமையை நிறைவேற்றி வருகின்றனர். ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இந்த அருளுக்குரிய மார்க்க நிறுவனத்தில் மார்க்கக் கல்வியைப் பெற்று மார்க்கத்திற்குநம தொண்டாற்றுவதன் பக்கம் கவனமூட்டியுள்ளார்கள்.

எனவே ஹுஸூர் அவர்களின் மேற்கோளின் ஒளியில் அதிகம் அதிகமான வாக்கிஃபே நவ் மற்றும் வாக்கிஃபீனே நவ்வைச் சாராத மாணவர்கள் ஜாமிஆ அஹ்மதிய்யாவில் சேர்ந்து மார்க்கக் கல்வியைப் பெற்று மார்க்கத்திற்கு தொண்டாற்றுவதற்குத் தம்மைத்தாமே அர்ப்பணிக்க வேண்டும். எனவே ஜாமிஆ அஹ்மதிய்யாவில் இணைய விரும்புபவர்கள் இந்திய வக்ஃபே நவ் துறையைத் (நஸாரத் தஃலீம்) தொடர்பு கொள்ளவும். மேலும் விரைவாக சேர்க்கைப் படிவத்தை முழுமையாகப் பூர்த்தி செய்து ஜூன் 30 ஆம் தேதிக்குள் இந்திய வக்ஃபே நவ் (நஸாரத் தஃலீம்) அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவும். ஜாமிஆ அஹ்மதிய்யாவின் நுழைவுத் தேர்வு 15 ஜூலை 2019 அன்று நடைபெறும்.

**சேர்க்கைக்கான நிபந்தனைகளாவன:**

1. மெட்ரிக் தேரியவருக்கு 17 வயதும், +2 தேரியவருக்கு 19 வயதும் இருக்க வேண்டும். திருக்குர்ஆன் மனனம் செய்தவருக்கு விதிவிலக்காக சலுகையும் உண்டு.

2. *National Carieer Planing Committee waqfe nau Bharat* ஜாமிஆ அஹ்மதிய்யாவின் நுழைவுத் தேர்வில் பங்கு பெறும் மாணவர்களிடம் எழுத்துத் தேர்வை நடத்தும். பிறகு ஜாமிஆ அஹ்மதிய்யாவிற்குத் தேர்ந்தெடுக்கும். எழுத்துத் தேர்வில் திருக்குர்ஆன், ஹதீஸ், இஸ்லாம், அஹ்மதிய்யத், மார்க்க அறிவுகள், அரபி, உர்து, கணிதம், ஆங்கிலம் மற்றும் பொது அறிவு *(General Knowledge)* தொடர்பான கேள்விகள் கேட்கப்படும்.

3. எழுத்துத் தேர்வில் வெற்றி பெறும் மாணவர் நூர் மருத்துவமனையில் மருத்துவ பரிசோதனை நடைபெறும். மாணவரின் எழுத்துத் தேர்வு மற்றும் மருத்துவ பரிசோதனையில் *Medical Report* திருப்திகரமாக இருக்கும் நிலையில் பிறகு ஹுஸூர் அவர்களின் ஒப்புதலுக்குப் பிறகு ஜாமிஆவில் சேர்க்கப்படுவார்.

4. கிராஜுவேட் செய்துள்ள மாணவர்களுக்கு ஜாமிஆ அஹ்மதிய்யாவில் முன்னுரிமை வழங்கப்படும்.

மாவட்ட அமீர்மார்கள், ஜமாஅத்தின் அமீர்மார்கள், சத்ர் ஜமாஅத், முபல்லிக்மார்கள், முஅல்லிம்மார்களிடம் விண்ணப்பிக்கப் – படுவதாவது, நல்ல, தகுதி வாய்ந்த மார்க்க அறிஞர்கள் மற்றும் முபல்லிக்குகள் ஆவதற்குரிய மனவளமும், திறமையும், மார்க்கத் தொண்டாற்றும் உணர்வும் கொண்ட, நன்மையின் பால் ஈர்ப்புள்ள மாணவர்களைத் தேர்ந்தெடுத்து சேர்க்கைக்கான பாடத்திட்டத்தை நன்றாக ஆயத்தம் செய்வித்து, குறிப்பிட்ட தேதிக்கு ஜாமிஆ அஹ்மதிய்யாவிற்கு அனுப்புவதற்கான ஏற்பாட்டைச் செய்யுங்கள். மேலும் அத்தகைய மாணவர்களின் சேர்க்கைப் படிவத்தை விரைவாகப் பூர்த்தி செய்து இந்திய வக்ஃபே நவ் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவும். சேர்க்கைப் படிவத்தை *Email* மூலமாக பெற்றுக் கொள்வதற்கான *Mail Id: waqfenau@qadian.in*

*INCHARGE WAQF-E-NAU DEPARTMENT*
*OFFICE WAQF-E-NAU INDIA (NAZARAT TALEEM)*
*M.T.A BUILDING, CIVIL LINE, QADIAN*
*DISTRICT: GURDASPUR, PUNJAB (INDIA) PIN:143516*
*CONTACT: 01872-500975, 9988991775*
(நாஸிர் தஃலீம் & சத்ர் நேஷனல் பிளானிங் கமிட்டி வக்ஃவே நவ் பாரத்)

**காதியானில் 125 –வது ஆண்டு மாநாடு 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 27, 28, 29 ஆகிய தேதிகளில் நடைபெறும் இன்ஷா அல்லாஹ்**

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் மூஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்ய..) அவர்கள் காதியானில் நடைபெறும் 125 –வது ஆண்டு மாநாடு 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 27, 28, 29 (வெள்ளி, சனி, ஞாயிறு) ஆகிய தேதிகளில் நடத்துவதற்கான அனுமதியை வழங்கியுள்ளார்கள். ஜமாஅத் சகோதரர்கள் இப்போதிருந்தே துஆக்களுடன் இந்த அருளுக்குரிய ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்வதற்காக நிய்யத் வைத்து மாநாட்டில் கலந்து கொள்வதற்கு ஆயத்தம் ஆகுங்கள். அல்லாஹ் நம் அனைவருக்கும் இந்த ஆன்மீக மாநாட்டில் கலந்து கொண்டு அதன் அருள்களிலிருந்து பலன் பெறுவதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக! இந்த ஆண்டு மாநாடு எல்லா வகையிலும் வெற்றி பெறுவதற்கும், அருளுக்குரியதாக இருப்பதற்கும், நல்ல ஆன்மாக்கள் நேர்வழி பெறுவதற்குக் காரணமாக அமைவதற்கும் துஆக்கள் செய்து வாருங்கள். ஜஸாகுமுல்லாஹ் அஹ்ஸனல் ஜஸா. (நாஸிர் இஸ்லாஹ்–வ–இர்ஷாத் மர்கஸிய்யா காதியான்)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad